11

நரகாசுரப் படுகொலை

(ஓர் சிறந்த ஆராய்ச்சி நூல்)

OFFICE OF THE REGISTRAR OF ...
10 JAN 1948
MADRAS

ஆக்கியோன்

அருப்புக்கோட்டை M. S. இராமசாமி

வெளியிடுவோர்

சிவ. சண்முகசுந்தரன்

அருப்புக்கோட்டை

1947

R34
N47
112139

விலை-அணா 12

நரகாசுரப் படுகொலை.

(ஓர் அரிய ஆராய்ச்சி நூல்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1948
MADRAS

ஆக்கியோன்;

அருப்புக்கோட்டை, M. S. இராமசாமி.

வெளியிடுவோர்

சிவ. சண்முகசுந்தரன்

அருப்புக்கோட்டை

1947.

நாடார் குல மித்திரன் பிரஸில்
பதிக்கப்பட்டது.

விலை அணு 12.

R34
N47

TAMIL NADU ... LIBRARY MADRAS
No. 112139

பெருமைசால் பெரியார் ஈ. வெ இராமசாமி அவர்கள் அன்புடன் அளித்த

முகவுரை.

"நரகாசுரப் படுகொலை" என்னும் இப் புத்தகத்திற்கு, நான் முகவுரை எழுத வேண்டும் என்று, எனது நண்பர் ஒருவர் வேண்டிக் கொண்டார். மகிழ்ச்சியோடு சம்மதித்து எழுதுகிறேன்.

நரகாசுரன் என்பதாக ஒருவன் இருந்தானோ, இல்லையோ என்பதும், நரகாசுரன் வதை சம்மந்தமான கதை, பொய்யோ, மெய்யோ என்பதும் பற்றி, நான் கவலை எடுத்துக் கொள்ள வில்லை. இப்படிப்பட்ட கற்பனைகளைச் செய்து, ஆரியர்கள் அவற்றை நம் தலையில் சுமத்தி, நம்மை அதற்கு ஆளாக்கி. தங்கள் உயர்வுக்கும், நமது இழிவுக்கும், தங்கள், வாழ்வுக்கும், நமது தாழ்வுக்கும், அவர்கள் நலத்திற்கும், நமது கேட்டிற்கும், அவர்கள் சமர்த்துக்கும், நம் முட்டாள் தனத்துக்கும், நிரந்தர ஆதாரவாக்கிக் கொண்டு, பாடும், கவலையுமில்லாமல் சுகபோகிகளாய் இருந்து, நம்மைச்சுரண்டி வருகிறார்களே என்பதற்காகவே, நான் கவலைப்பட்டு இதன் தன்மையை, நம் திராவிட மக்களுக்கு உணர்த்துவதற்கு ஆக பொதுவாகவே, ஆரிய சாஸ்திர புராண இதிகாசங்களின் ஆபாசங்களையும், காட்டுமிராண்டித் தனங்களையும், விளக்கும் தொண்டை எனது வாழ்வின் முக்கிய தொண்டுகளில் ஒன்றாகக் கொண்டு, பணியாற்றி வருகிறேன். அதனாலேயே இப்படிப்பட்ட புத்தகத்திற்கு என்னை முகவுரை எழுதக் கேட்டார்கள் என்பதாகக் கருதியே, எழுதச் சம்மதித்தேன்.

திராவிட மக்கள் அருள் கூர்ந்து, நரகாசுரன் வதைப் புராணத்தை, சற்று, பகுத்தறிவோடு சிந்திக்கவேண்டும். கதையின் சுருக்கம் என்னவென்றால்; நரகாசுரன் என்கிற அசுரன், அயோக்கியனாக இருந்தான். கடவுளால் கொல்லப்பட்டான். பொதுமக்கள் அவனுடைய சாவுக்காக, மகிழ்ந்து கொண்டாட வேண்டும் என்பதேயாகும்;

II

ஆனால், இதற்காக சித்தரித்த கதையின்தன்மை எப்படிப் பட்டது? அதன் உள் கருத்து எப்படிப்பட்டதாய் இருக்கும்? இந்த 20-ம் நூற்றாண்டாகிய விஞ்ஞான காலத்தில், இதை நம்பி இக்கருத்துக்கு ஆளாகலாமா? என்பதைச் சிந்திக்கத்தான், இந்த 'நரகாசுரப் படுகொலை' என்கின்ற புத்தகம், அருப்புக்கோட்டை தோழர் M. S. இராமசாமி அவர்களால் எழுதப்பட்டிருக்கிறது. இந்த மூலக்கதைக்கு, நரகாசுரன் தேவையே இல்லை என்றாலும், திராவிடர்களை இழிவு படுத்துவதற்கு என்று, எழுதப் புகுந்த கற்பனையில், ஆரியர்களது நிலை, தன்மை, ஆகியவை எவ்வளவு இழிவாகக் கூடியதா யிருந்தாலும், அதைப் பற்றிக் கவலைப்படா மல், இக் காரியத்தில் புகுந்திருக்கிறார்கள்.

இதற்கு ஒரு சமாதானம் என்னவாக இருக்குமென்றால், இக் கதை தொகுத்த காலத்தில், ஆரியர்கள்; அவ்வளவு காட்டு மிராண்டிகளாகவும், அவ்வளவு மானவமானக் கவலையற்ற மிருக வாழ்வு வாழ்ந்தவர்களாகவும், இருந்திருக்கலாம் என்பதாகக் கொள்ளலாம். என்றாலும்; இக் காலத்திலுள்ள ஆரியர்களும்; அதாவது, எவ்வளவோ விஞ்ஞான அறிவு, பகுத்தறிவு, மான உணர்ச்சி கொண்ட இக்கால ஆரியர்களும், இந்த, இது போன்ற ஆபாசக் கதைகளைக் காப்பாற்றி பிரசாரம் செய்து, மக்களையும் அவற்றை நம்பி நடக்கும்படி செய்கிறார்கள் என்றால், நம் மக்கள் நிலை அதை விட காட்டு மிராண்டித் தனமானதும் மானவமான லக்ஷியமற்றதும், மிருகப்பிராயத்திலிருப்பதும், அல்லது; அப்படி யெல்லாம் இருப்பதாக அவர்கள் கருதி இருப்பதாகவாவது இருக்கலாம்.

எப்படி இருந்தாலும், இனியாவது பகுத்தறிவோடு, மான உணர்ச்சியோடு, சிந்திக்க வேண்டியது திராவிடர் கடமையாகும்.

ஆரியக் கற்பனையாகிய இக்கதையில் உள்ள முக்கிய சில குறிப்புகளை மாத்திரம் குறிப்பிடுகிறேன்.

1. இரணியாக்ஷன் என்கிற இராக்கதன், பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு சமுத்திரத்திற்குள் போய் பாதாளத்தில் ஒளிந்துகொண்டது.

2. மகாவிஷ்ணு என்கின்ற கடவுள், பன்றி உருவம் எடுத்து, சமுத்திரத்திற்குள் புகுந்து, இராக்கதனைக் கொன்று, பூமியை எடுத்துக்கொண்டு வந்து விரித்துவிட்டது.

3. இந்த விஷ்ணுப் பன்றியைக் கண்டு, பூமிதேவி காம விகாரப்பட்டுப் போகித்துக் கலவி செய்தது.

4. இக் கலவியின் பயனாய் ஒரு பிள்ளை பிறந்து, அப் பிள்ளை ஒரு அசுரனாக ஆகி, ஒரு இராஜ்ஜியத்தை ஆளும், அரக்கனாகி, தேவர்களுக்கு (ஆரியர்களுக்கும், தன் தாய் தந்தையான கடவுளுக்கும்) கேடு செய்தது.

5. பிறகு, அந்த நரகாசுரனைக் கடவுளும் கடவுள் மனைவியும் கொன்றது.

6. அந்தக் கொலைக்கு, மக்கள் மகிழ்வது.

7. அந்த மகிழ்ச்சிக்குப் பேர்தான் தீபாவளி கொண்டாட்டம்.

என்பனவாகிய இந்த ஏழு விஷயங்களை திராவிட மக்கள் மனித புத்தி கொண்டு சிந்திக்க வேண்டும் என்பதே, இப் புத்தகம் எழுதியவருடைய ஆவல்.

ஆகலால், பொது மக்கள் இதை இந்தப் புத்தகத்தின் உதவியைக் கொண்டு நன்றாய் ஆராய்ச்சி செய்து பார்த்து தீபாவளி கொண்டாட வேண்டியது அவசியம் என்று பட்டால் அந்தப்படி செய்யுங்கள். அதுவே ஆசிரியருக்கு மக்கள் கைம்மாறு ஆகும்.

இப்புத்தகம் எழுதியதற்காக தோழர் M. S. இராமசாமிக்கு திராவிடர் சார்பாக எனது நன்றி உரித்தாகுக.

ஈ. வெ. ராமசாமி.

ஆக்கியோன் முன்னுரை.

சென்ற ஆண்டு தீபாவளியன்று, அருப்புக்கோட்டையில் மாபெரும் கருஞ்சட்டைப்படை ஊர்வலமொன்று நடைபெற்றது. ஊர்வலத்திற்குப் பின், பிரம்மாண்டமான "தீபாவளி எதிர்ப்பு" கூட்டம் கூடியது. அக்கூட்டத்தில், "தீபாவளிப் பண்டிகை திராவிடர் பண்டிகையா"? என்னும் பொருள்பற்றி, நான், எனக்குத் தெரிந்த சிலவற்றைப் பேசினேன். கூட்டம் முடிந்த பிறகு, சில நண்பர்கள், நான் பேசிய பேச்சுக்களை, ஒரு புத்தக வடிவமாக வெளியிட்டால், மிகப் பயனுடையதாக இருக்குமென்று சொன்னார்கள். அவர்களுடைய ஆலோசனைப் படியே, செய்வதாக ஒப்புக்கொண்டேன். அவ்வாறு, நான் ஒப்புக்கொண்டதே, இந்நூல்; தோன்றுவதற்குக் காரணமாகும்; நான், அன்று பேசிய பேச்சுக்களை சிற்சில இடங்களில்; சுருக்கியும், விளக்கியும், தக்கன புகுத்தியும், தகாதன விலக்கியும், இந் நூலில் எழுதியுள்ளேன்.

"நரகாசுரப் படுகொலை" என்னும், இந்த நூலை எவ்வளவு பெரிய நூலாகவேண்டுமானாலும் வெளியிடலாம்.

புராண இதிகாசங்களில் வரும், புரட்டுகளையும், ஆரியப் பித்தலாட்டங்களையும், ஆதார ஆராய்ச்சி பூர்வமாக விளக்குவதென்றால், விஷயங்கள் அடுக்கடுக்காக வளர்ந்து கொண்டே போகின்றன.

அவ்வாறு எழுதிக்கொண்டே போவதென்றால் "சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்" என்ற இலக்கணத்தைக் கடந்து விடுவதோடு திராவிட மக்களின் பொருளாதார நிலைமை, எல்லாரையும் வாங்கிப்படிக்க இயலாததாக ஆக்கி விடும். எனவே; எவ்வளவு சுருக்க முடியுமோ அவ்வளவு சுருக்கி எழுதியுள்ளேன்.

நான் இந்த நூலை எழுதி முடிப்பதற்கு ஆராய்ச்சிப் பெருந்துணையாக, பல நூல்களை கால வரையறையின்றிக்

கொடுத்துதவிய, அருப்புக்கோட்டை சாலியர் பிரசாரப் பயிற்சிக் கழகப் புத்தகசாலையாருக்கு, நான் பெருங்கடன் பட்டுள்ளேன்.

இந்நூலுக்கு நன்கொடையும் கடனுதவியும் செய்த என் நண்பர்களுக்கு நன்றி.

இந்நூலை அச்சிட்டு வெளியிட முன் வந்த அருப்புக் கோட்டை திராவிடர் கழகத் தலைவர், தோழர். சிவ. சண்முக சுந்தரன் அவர்களை, நான் என்றும் மறக்கமுடியாது.

தீபாவளிக்கு முன்னரே, இந்நூலை வெளியிடவேண்டு மென்று, நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க விரைந்து அச்சிட்டுக் கொடுத்துதவிய நாடார் குல மித்திரன் அச்சகத்தாருக்கும் ஆங்குள்ள தொழிலாள நண்பர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

தீபாவளியை எதிர்த்துப் பிரசாரம் செய்ய விரும்பும் பேச்சாளர்களுக்கு, இந்நூல் ஓரளவு உதவியாக இருக்குமென்று நம்புகிறேன்.

25—10—47
அருப்புக்கோட்டை

இங்ஙனம்,
M. S. இராமசாமி,

புத்தகம் வேண்டுமா?

தோழர் M. S. இராமசாமி இயற்றிய "திராவிடநாடு பிரிவினைப் பாடல்கள்" என்னும் புத்தகமும் இந்த நரகாசுரப் படுகொலையும் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

சிவ. சண்முகசுந்தரன்,
புளியம்பட்டி,
அருப்புக்கோட்டை.
இராமநாதபுரம் ஜில்லா.

திரு. சிவ. சண்முகசுந்தரன் அவர்கள்

M. S. இராமசாமி

நரகாசூரப் படுகொலை.

சில நூறு ஆண்டுகளாகத் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிற தென்பதை எல்லோரும் அறிவர். இந்தப் பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது? இதனால் யாருக்கு என்ன விதமான நன்மை ஏற்படுகிறது? இதைக் கொண்டாடாமல் நிறுத்தி விட்டால் என்ன கேடு வந்துவிடும்? இந்தப் பண்டிகையை ஆதியில் ஆரம்பித்தவர்கள் யார்? அவர்கள் இதை ஆரம்பித்த நோக்கம் என்ன? இப்போது இந்தப் பண்டிகையை யார் யார் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்? இந்தப் பண்டிகையைக் கொண்டாடக் கடமைப்பட்டவர்கள் யார்? இந்தக் கொண்டாட்டம் அறிவுடைமையான கொண்டாட்டம்தானா? என்பன போன்ற விவரங்களை அறிந்திருப்பவர்கள் — அறிய விரும்பக் கூடியவர்கள் நூற்றுக்கு இரண்டொருவர் கூட, இந்த நாட்டில் காண முடியவில்லை.

இத்தகைய கண் மூடித்தனமான பழக்கங்கள் இந்த நாட்டில் மிக மிக மலிந்துவிட்ட காரணத்தினால், மல மூத்திர சுத்தம் செய்பவனுக்கும், மல மூத்திரக் கிடங்குகளுக்கு அருகில் குடியிருப்பவனுக்கும், அந்த நாற்றத்தின் மீது அருவெறுப்புத் தோன்றாமல் இருப்பதுபோல, இந்நாட்டு மக்களுக்கு — அதிலும் சிறப்பாக நம் திராவிட மக்களுக்கு தீபாவளிப் பண்டிகை போன்ற அறிவற்ற — மானமற்ற — பொருளற்ற செயல்களைச் செய்வதற்கு மனத்தாங்கலோ வெட்க உணர்ச்சியோ ஏற்படாமல் இருந்து வருகிறது. எல்லா நாடுகளிலும் எல்லா மக்களும் பற்பல பண்டிகைகள் கொண்டாடுகிறார்கள் என்றாலும், இந்த நாட்டைப் போல — குறிப்பாக நம் திராவிட மக்களைப் போல இன்ன காரணத்தினால் இன்ன காரியம் செய்கிறோம், இது நம்முடையது இது விரோதிகளுடையது என்பதைக்கூட உணராமல், மானந் தரும் பண்டிகை ஈனம் தரும் பண்டிகை என்கிற வித்தியாசங்களையும் உணராமல், பண்டிகை என்றால் சரிதான்.

புராணீகன் சொன்னால் சரிதான். பார்ப்பான் செய்வதும் சொல்வதும் முக்கியமானதுதான். நாமும் அவ்விதமே செய்யவேண்டுமென்று நம்பிச் செய்யும் செயல்களை வேறு எந்த நாட்டிலும் காணமுடியாது. இத்தகைய மூடத்தனத்தின் அடிப்படையில் முளைத்துப் பயிரானவைகளில் ஒன்றுதான், தீபாவளிப்பண்டிகையும் என்பதை இச்சிறு நூலில் ஆராய்வோம்.

தீபாவளிப் பண்டிகைக்கு முக்கிய ஆதாரமாக விளங்குவது விஷ்ணுபுராணங்களில் ஒன்றான பாகவதமாகும். இதிகாசங்களில் ஒன்றான பாரதத்தையும் ஒரு துணை ஆதாரமாகக் கொள்ளலாம். புராணங்களை எழுதி வைத்த ஆரியப் புலவர்கள் தங்கள் தங்கள் மதத்தையும் வழிபடு கடவுளையும் உயர்த்தியும், இதர மதங்களையும் கடவுள்களையும் எவ்வளவு தூரம் சாதுர்யமாக இழிவு படுத்த முடியுமோ அவ்வளவுக்கு இழிவாகத் தங்கள் தங்கள் புராணங்களில் எழுதுவதும், தங்களுடைய கடவுள்கள், உலகம் ஒப்புக்கொள்ள முடியாத ஏதாவது அக்கிரமம் செய்ததாக இருந்தால், அந்த அக்கிரமங்களைக் கூடுமானவரை தங்கள் புராணங்களில் எழுதாமல் விடுத்தும், அங்ஙனம் விலக்கி விட முடியாததாகவும் அக்கிரமச் செயலாகவும் இருந்தால், அதற்கு ஏதாவது நொண்டிக் காரணம் — போலிக் காரணம் கூறி மழுப்பியும் புராணங்களை முடிப்பது வழக்கமாக இருப்பதால், எந்த மதப் புராணத்தை ஆராய வேண்டுமோ, அந்த மதத்திற்கு எதிர் மதப் புராணங்களையும் சேர்த்தே ஆராய்ந்தால் மட்டுமே உண்மை விளங்கக் கூடியதாக இருக்கிறது. அதாவது சைவ மதக்கடவுளர்களை ஆராயும்போது வைணவ புராணங்களின் உதவி இன்றியமையாததாகும். அதுபோலவே, வைணவ மதக்கடவுளர்களை ஆராயும்போது சைவப் புராணங்களின் உதவி இன்றியமையாததாகும்.

எனவே, நாம் இந்தத் தீபாவளிப் பண்டிகை ஆராய்ச்சியின் போது, இன்றியமையாத சைவப் புராணங்களையும் ஒப்பு நோக்கி ஆராய்வோமாக.

ஆரியப் புலவர்கள் திராவிடர்களின் அறிவுக்கு குளோட் பாரம் (மயக்க மருந்து) கொடுப்பதற்கென்றே, மிகத் திறமை

யுடன் ஆக்கப்பெற்ற புராணச் சங்கிலிகள், ஒன்றுக்கொன்று பல முரண்பாடுகளை உள்ளடக்கிக் கொண்டிருந்தாலும், அவை ஒன்ருேடொன்று, மிக அழுத்தமாக ஆராய்ந்தால் மட்டுமே புலப்படக்கூடிய விதத்தில், பின்னி வைக்கப்பட்டிருக்கின்றன, என்பதை அறிவுடையோர் நன்கறிவர். ஆரியர்கள் தங்கள் பகைவர்களை நய வஞ்சக முறையிலோ, நேருக்கு நேர் நின்று போர் புரிந்தோ, வெற்றி கொண்ட கதைகளையே, ஒருவாறு புனைந்துரைக்கப்பட்டிருக்கின்றன என்பதும், அந்தப் புனைந்துரைகளில் வரும் ஆரிய விரோதிகளினுடைய உண்மையான பெயர்களும், இயற்கையான நற்குணங்களும், வேண்டுமென்றே மறைக்கப்பட்டு, மிகக் கொடியவர்களாக உலகிற்குக் காட்டக் கருதி மனம் போனபடி சித்தரிக்கப்பட் டிருக்கின்றன என்பதும், ஆராய்ச்சியாளர்கள் அனைவரும், ஒருமுகமாக ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

இத்தகைய ஈனத்தனமான சித்தரிப்புகளில் ஒன்றுதான், பாகவத புராணத்தில் வரும் நரகாசுரன் கதை என்பதையும், இந்தக்கதைதான் தீபாவளிப் பண்டிகைக்கு ஆதாரமாகச் சொல்லப்பட்டு வருகிறதென்பதையும், நம் திராவிட மக்கள் முதலாவது மனதில் நன்ருகப்பதிய வைத்துக்கொள்ளவேண்டும். இனிமேல் நரகாசுரன் வரலாற்றை என்னவென்று பார்ப்போம்.

நரகாசுரன் வரலாறு.

சுவாயம்பு மனுவின் அரசாட்சிக் காலத்தில், காசிபனுக்கு அவனுடைய இரண்டாவது மனைவி திதி என்பவள் வயிற்றில், இரண்யன் என்றும், இரண்யாக்ஷன் என்றும்; இரண்டு அசுரப் பிள்ளைகள் பிறந்தார்களாம். அவர்களில் இளையவனுகிய இரண்யாக்ஷன் என்பவன் ஒருசமயம் பூமியைப் பாய்போலச் சுருட்டி எடுத்துக்கொண்டு, பாதாளத்திற்போய் ஒளிந்து கொண்டானும். தன்னுடைய அரசாட்சிக் குட்பட்ட பூமி சுருண்டு மறைந்து போனது கண்டு, சுவாயம்பு மனு இந்திரனிடம் முறையிட்டானும். இந்திரன் இது தன்னுல் ஆகாத காரியமென்று கருதித் தேவர்களும் சுவாயம்பு மனுவும் புடைசூழச் சென்று பிரமனிடம் முறையிட்டானும். பிரமதேவனும் தன்னுல் ஆகாத

காரியமென்று கருதி, மற்றவர்களையும் கூட்டிக் கொண்டுபோய் விஷ்ணுவிடம் முறையிட்டானும். உடனே விஷ்ணுவுக்கு மன மிரங்கிப் பூமியை மீட்டுத்தருவதாக வாக்களித்து பிரமதேவன் மூக்கிலிருந்து பன்றி வடிவாகப் புறப்பட்டுச் சென்று, பாதா ளத்தையடைந்து, இரண்யாக்ஷனுடன் கடும்போரிட்டு அவனைக் கொன்று விட்டு பூமியை மீட்டுத் தன்வக்கிர தந்தங்களிடையே வைத்துச் சுமந்துகொண்டு வந்து, முன்போல விரித்து வைத்தாராம்.

இவ்வாறு விஷ்ணுப் பன்றியானது பூமிதேவியைத் தன் னுடைய கோரப் பற்களிடையே தூக்கிச் சுமந்தும், தொட்டும், விரித்தும் ஏற்பட்ட, ஸ்பரிச உணர்ச்சியினல் பூமி தேவிக்கு விஷ்ணுப் பன்றிமீது கட்டுக்கடங்காத காமம் உண்டாயிற்றும். தனக் குண்டாயிருக்கும் காம விகாரத்தைத் தணிக்க வேண்டு மென்று பூமிதேவி விஷ்ணுப் பன்றியிடம் கேட்டுக்கொள்ள, அதற்கிணங்கி விஷ்ணுப்பன்றி பூமிதேவியைப் புணர்ந்ததாம். அந்தப் புணர்ச்சியின் பயனுகப் பூமிதேவியின் வயற்றில் நரகா சுரன் பிறந்தானும். இதுவே நரகாசுரன் பிறப்பின் வரலாருகும். இனி விஷ்ணுப்பன்றி என்னவாயிற்றென்பதை அறிவோம்.

இவ்வாருக, பிரமேந்திராதி தேவர்களாலும் வெல்ல முடி யாதென்று கருதப்பட்ட, இரண்யாக்ஷனை வென்றதனுலும், பூமி தேவியே தன்மீது காமங்கொண்டு வலிய அணைந்ததாலும், ஏற் பட்ட மகிழ்ச்சிப்பெருக்கினல், விஷ்ணுப்பன்றிக்கு மிகுந்த கர்வ முண்டாகி வெறிகொண்டு பூமிக்கடியில் இருக்கும் ஏதோ ஒரு ஆமையுடன் சண்டையிட்டதாம். ஆமையும் பன்றியும் சண்டை யிட்டால் உலகமே அழிந்துவிடுமென்று கலங்கிய தேவர்கள், விஷ்ணுப்பன்றி அக்கிரமம் செய்வதாகச் சிவனிடம் முறை யிட்டார்களாம். தேவர்களின் வேண்டுகோட்கிரங்கிய சிவன், ஆமையும் பன்றியும் சண்டையிட்டுக் கொண்டிருந்த போர்க் களத்துக்கு வந்து, ஆமையின் சார்பில் விஷ்ணுப் பன்றியுடன் போரிட்டு, அதன் வக்கிரதந்தம் என்கிற, கொம்புகளை ஒடித்துக் கொட்டத்தை அடக்கினராம். அதன் பிறகு, மகா விஷ்ணுப் பன்றிக்குச் சுய அறிவு உண்டாகி ஒழுங்காக இருந்ததென்று சைவ புராணம் ஒன்று இவ்வரலாற்றைக் கூறுகிறது.

இனி, வைணவ புராணங்கள் என்ன கூறுகின்றன என்பதைக் காண்போம். வைணவபுராணங்கள் சுவாயம்பு மனுவின் காலத்தில் நரகாசுரன் பிறந்தான் என்று சைவ புராணம் கூறியதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல், மகாவிஷ்ணுவின் பன்றி அவதாரத்தின் போது நரகாசுரன் பிறந்தான் என்று சுருக்கமாக அவன் பிறந்த வரலாற்றை முடித்துக்கொண்டு, அவன் ஆட்சி செய்த இடம், கொல்லப்பட்ட காரணம், அவன் இறந்தபிறகு அவனுடைய நாடு செல்வம் மனைவி மக்கள் சூறையாடப்பட்டது ஆகியவற்றை சுருக்கமாகக் கூறுகின்றன. விஷ்ணுப் பன்றி ஆமையுடன் சண்டை யிட்டதையும் சிவன் தலையிட்டு அடக்கி வைத்ததையும் வைணவ புராணங்கள் வெளியிடாமல் மறைத்தது இங்கு குறிப்பிடத்தக்கனவாகும். எனவே வைணவ் புராணங்களிற் கண்டவைகளை சுருக்கித் தொகுத்து இங்கே கூறுவோம்.

பாகவதம் முதலியன கூறுவது.

பிராக்ஜோதிஷபுரம் என்ற பட்டினத்தில் (மாகிஷ்மதிப் பட்டினம் என்று சில கூறுகின்றன) மகாவிஷ்ணுவின் பன்றியவதாரத்தின் போது, பூமி தேவியிடம் பிறந்தவனாகிய நரகாசுரன் என்பவன், மிகுந்த பராக்கிரமசாலியாக ஆண்டுவந்தான். இவனுக்கு அயக்ரீவன், பஞ்சகன், நிசும்பன், பிராபணன், மூரன் முதலிய மந்திரிமார்கள் இருந்தனர். (மூரன் என்பவனை நரகாசுரனின் தம்பி என்றும் சேனாபதி என்றும் சிலபுராணங்கள் கூறுகின்றன) மிகுந்த படைப் பலமும் பலமான கோட்டைகளும் இருந்தன. ஒரு காலத்தில் நரகாசுரன் யானை வடிவத்துடன் சென்று, துவஷ்டாவின் மகள், கசேரு என்பவளைச் சிறைஎடுத்து வந்து வீட்டான். இவனுக்குப் பத்து மனைவியர் இருந்தனர். (1000 மனைவியர் இருந்தனரென்று சில புராணங்களிற் காணப்படுகின்றன) பகதத்தன் என்கிற மகனும் இருந்தான். துவிவிதன் என்கிற பெயருடையவனும் சுக்ரீவனுக்கு மந்திரியாக இருந்தவனுமாகிய, வானரன் ஒருவன் நரகாசுரனுக்கு நண்பனாக இருந்தான். இவ்வாறாக, நரகாசுரன் அரசாண்டு வருங் காலத்தில் வருணனுடைய குடையையும், அதிதி என்பவளுடைய காது நகையையும், கவர்ந்துகொண்டான். இந்திரனுடைய மணிகூட பர்வதம் என்கிற விளையாட்டுச் செய்குன்றையும் கவர்ந்துகொண்

டான். (இந்திரனுடைய சிம்மாசனம் கவரப்பட்டதாக சில புராணங்கள் கூறுகின்றன) நரகாசுரனுடைய பராக்கிரமத்தையும் அவன், அதிதி, வருணன், இந்திரன் இவர்களுடைய பொருட்களை அபகரித்துக்கொண்டதையும் கேள்விப்பட்ட கிருஷ்ணன், தன்னுடைய மனைவி சத்தியபாமை என்பவளுடன்; பிராக்ஜோதிஷபுரத்திற்கு வந்து; அரண்மனைக் காவலர்களைக் கொன்றுவிட்டு, ஐப்பசி மாதம் அமர பக்ஷம் திரயோதசியன்று இரவு, சதுர்த்தசி ஆரம்பிக்கும் நேரத்தில், நரகாசுரனிடம் போர் செய்தான். போரில் நரகாசுரனிடம் எதிர்நிற்கமுடியாத கிருஷ்ணன் மூர்ச்சையாகிவிட்டான். அப்போது பக்கத்தில் இருந்த சத்தியபாமை, நரகாசுரனுடன் போரிட்டுக் கொன்ருள். குற்றுயிராக இருக்கும்போது நரகாசுரன், தன்தாய் பூமிதேவியின் அமிசமான சத்தியபாமையிடம், அவனுடைய இறந்த நாளை உலகத்தார் கொண்டாட வேண்டுமென்று, வரம் கேட்டான். அவ்விதமே, சத்தியபாமை வரங் கொடுத்தாள். நரகாசுரன் இறந்த பின்பு, அவனுடைய பிராக்ஜோதிஷபுரம் என்ற பட்டினம், சூறையாடப் பட்டது. கிருஷ்ணனுடைய சேனைத் தலைவர்கள் அங்குள்ள பொன்னையும் பொருளையும் இளம் பெண்களையும் கைப்பற்றிக் கொண்டனர். நரகாசுரனுடைய அந்தப்புரத்திலிருந்த பட்டமகிஷியர், பத்துப் பெண்களையும், கிருஷ்ணன் சிறைப்பிடித்துச் சென்ருன். நரகாசுரனுடைய மகன், பகதத்தன் என்பவன், வாலியின் மகன் அங்கதனைப் போல, எதிரிகளுக்குச் சரணகதியடைந்து விட்டான். நரகாசுரனுடைய உயிர் நண்பர்களான முராசுரன் என்பவனும், துவிவிதன் என்கிற வானரனும், நண்பனுக்காகக் கடைசிவரை முன் வைத்த காலைப் பின் வைக்காமல் போராடி, கிருஷ்ணனுடைய அண்ணன் பலராமன் என்பவனுல் கொல்லப்பட்டனர். அதிதி, வருணன், இந்திரன் ஆகியவர்களுக்கு பறிகொடுத்த பொருள்கள் மீண்டும் கிடைத்தன. இவ்வளவோடு நரகாசுரன் வரலாற்றை வைணவ புராணங்கள் முடித்து விடுகின்றன.

இந்தப் புராணக்கதைகளில் கண்டிருக்கிற சத்தியபாமையின் வரத்தின்படியே, ஆண்டுகள்தோறும் ஐப்பசி மாதம் அமர பக்ஷம் திரயோதசி யன்று, இரவு சதுர்த்தசி சம்பந்தப்படும்

காலத்தில், இந்து மதம் என்கிற ஈனப் பெயரை, எழிற் பெயர் என்று சூட்டிக் கொண்டிருக்கும், இந் நாட்டிலுள்ள சைவ வைணவ சமயத்தைச் சேர்ந்தவர்கள், எண்ணெயிட்டு முழுகிப், புத்தாடை தரித்து, உலகத்திலுள்ள 210 கோடி மக்களும் அப்படியே சத்தியபாமையின் வரத்தை மெய்ப்பித்து வருவதாகக் கருதிப், புளகாங்கிதமடைகின்றனர். இனிப் புராணங்களிற் கூறிய கூற்றுக்கள், எவ்வளவு தூரம் நேர்மையும், உண்மையும், கருத்துக்குப் பொருத்தமும் உடையன என்பதை ஆராய்வோம்.

நரகாசுரன் காலம்.

முதலாவதாக சுவாயம்புமனுவின் அரசாட்சிக் காலத்தில் நரகாசுரன் பிறந்தான் என்று சைவ புராணங்கள் கூறுவதை எடுத்துக் கொள்வோம். இப்பொழுது நடப்பது, துவிதீய பிரார்த்தம், 8-வது சுவேத வராக கல்பம், 22-வது வைவசுதமன் வாந்தரம் என்று, புராணீகர்கள் கூறுகிறார்கள். ஆரியப் புரோகிதர்களும், திருமணம் கருமாதி முதலிய சடங்குகளில், சங்கற்பம் என்கிற சுலோகம் சொல்லும்போது, அன்றைய நாள், நக்ஷத்திரம், திதி, யோகம், கரணம் ஆகியவைகளைச் சொல்வதற்கு முன்னால், சுபாப்யாம், சுபதினே, சோபனே, முகூர்த்தே ஆத்யப்ர மண துவிதீய பிரார்த்தே சுவேத வராக கல்பே வைவசுதமன் வந்தரே என்பதும் இப்போது வைவசுத மனுவின் காலம் என்பதையே வலியுறுத்தும்.

இந்த மனுக்கள் ஒவ்வொருவருடைய ஆட்சிக் காலத்தையும் அந்தந்த மனுக்களுடைய பெயரையும் முன்னால் சேர்த்து மனுவாந்திரம் என்று புராணீகர்கள் குறிப்பிடுகிறார்கள். உதாரணமாக சுவாயம்புமனுவின் ஆட்சிக்காலத்தை சுவாயம்பு மன்வாந்தரம் என்றும், வைவசுத மனுவின் ஆட்சிக் காலத்தை வைவசுத மன்வாந்தரம் என்றும் அழைக்கப்படுவதை குறிப்பிடலாம். இப்படியே ஒவ்வொரு மன்வாந்தரங்களையும், அவரவர்கள் பெயரைச் சேர்த்துக் குறிப்பிடுகிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த மனுக்கள் ஒவ்வொருவருக்கும் 18 சதுர யுகங்கள் வரை ஆட்சிக் காலம் என்று சொல்லப்படுகிறது. சதுர யுகம்

என்றால், 17 லக்ஷத்து 28 ஆயிரம் வருஷம் கொண்டது கிரேதா யுகம் என்றும், 12 லக்ஷத்து 96 ஆயிரம் வருஷம் கொண்டது திரேதாயுகம் என்றும், 8 லக்ஷத்து 64 ஆயிரம் வருஷம் கொண்டது துவாபர யுகம் என்றும், 4 லக்ஷத்து 32 ஆயிரம் வருஷம் கொண்டது கலியுகம் என்றும், இந்த நான்கு யுகங்களும் சேர்ந்தது ஒரு சதுர யுகம் அல்லது மகா யுகம் என்றும் சொல்லப் படுகிறது.

இந்தக் கணக்கின்படி ஒரு சதுர யுகத்துக்கு 43 லக்ஷத்து 20 ஆயிரம் வருஷங்களாகும். இவ்வாறு ஒரு மனுவாந்தரத்துக் குரிய 18 சதுரயுகங்களையும் கணக்கிட்டால், மொத்தம் 7 கோடியே 77 லக்ஷத்து 60 ஆயிரம் வருஷங்கள் ஒவ்வொரு மனுவுக்கும் ஆட்சிக் காலம் என்று ஏற்படுகிறது.

கிரேதா யுகம்	ஆண்டு	17,28,000
திரேதா யுகம்	,,	12,96,000
துவாபர யுகம்	,,	8,64,000
கலி யுகம்	,,	4,32,000
ஆகக் கூடிய சதுர யுக ஆண்டு		43,20,000
		18
ஆகக் கூடிய மன்வாந்தர ஆண்டு		7,77,60,000

இந்தக்கணக்குப் பிரகாரம் 1-வது சுவாயம்பு மனுவுக்குப் பிறகு 2-வது சுவரோசிஷ மனுவென்றும், 3-வது உத்தம மனுவென்றும், 4-வது தாமச மனுவென்றும், 5-வது ரைவத மனுவென்றும், 6-வது சாட்சூச மனுவென்றும், 7-வது வைவதமனுவென்றும் ஒருவர்பின் ஒருவராகப் பல மனுக்கள் ஆட்சி செய்ததாகத் தெரிகிறது.

இந்த மனுக்கள் அரசாளுகின்ற தேசத்திற்கு எல்லை எது? இவர்களுடைய அரசாட்சி முறை எப்படி? இவர்களுடைய நாட்டிற்குள் ஜனத்தொகை எவ்வளவு? சோவியத் ருஷ்யா போன்ற பொதுவுடமை சர்க்காரா? அமெரிக்கா போன்ற ஜனநாயக சர்க்காரா? ஜப்பான் போன்ற முடியாட்சியா? என்பன

போன்ற விவரங்களைப் புராணப் பண்டிதர்களிடம் தான் கேட்க வேண்டும்.

இந்த மனுக்கள் ஒவ்வொருவரும் பல பிள்ளைகளும், வெவ்வேறு குடிகளும், வெவ் வேறு ரிஷிகளும் உடையவர்களாக இருப்பார்களென்றும், ஒவ்வொருவருடைய ஆட்சிக்காலத்திலும் மகாவிஷ்ணு ஒருமுறை எதாவதொரு அவதாரம் எடுத்துவருவாரென்றும் சொல்லப்படுகிறது.

இந்த மனுக்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள் என்றாலும், அவர்கள் சந்ததி பாரம்பரை முறையாக இல்லாமல் இருப்பதும், ஒருவர் ஆட்சியில் இருந்த குடிகளும் ரிஷிகளும் அடுத்தவர் ஆட்சியில் இல்லாதிருப்பதும் என்ன காரண மென்று நமக்குத் தெரியவில்லை. அதைப் பற்றிய ஆராய்ச்சிக்குப் புராணங்களில் கருவியும் புலப்படவில்லை. இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதற்கும் மகா விஷ்ணுவைக் கண்டு தான் விசாரிக்க வேண்டுமெனத் தெரிகிறது.

இந்த மனுக்களின் ஆட்சி முறைகளையும் வரலாறுகளையும் நம் திராவிட மக்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு புராணங்களிற் கண்ட சிலவற்றை சாரச் சுருக்கமாகச் சொல்கிறோம்.

மனுவாந்தரங்கள்

(1) சுவாயம்புமனுவுக்கு பிரியவிரதன், உத்தானபாதன் என்னும் இருவர் மக்களாகவும், எமாள் என்கிற தேவர்கள் குடிகளாகவும்; மரீசி, அத்திரி, ஆங்கிரசர், கிருது, புலத்தியர், வசிட்டர் ஆகியோர் ரிஷிகளாகவும் இருந்தார்களாம். இவன் காலத்தில் மகாவிஷ்ணு, யஞ்ஞமூர்த்தி அல்லது சசிகேசன் என்ற பெயருடன் வேள்வித் தீயில் அவதரித்தாராம். இவரே இந்திரனாகவும் இருந்தாராம்.

(2) சுவரோசிஷ மனுவுக்கு (இவன் அக்கினியின் மகன் எனவும் சப்த ரர்சசி மகன் எனவும் சொல்லப்படுகிறான்) சயித்திரதன், கிம்புருடன், சுக்ருதி, அரிக்னன், சோதிர்யன், மூர்த்திரயன், ஸ்மயன் என்பவர்கள் பிள்ளைகளாகவும்;

துஷிதாள், பராவ்தாள் என்பவர்கள் குடிகளாகவும்; மேதாதி, அக்னீத்ரர், அக்னிவாகர், வசு, துதிமான், சோதிஷ்மான், சுபுரு, அவ்யர், சுவனர், மூர்ச்சனி, தம்பன், பிராணன், தாந்தன், பிரிடிதன், திமிரன் ஆகியவர்கள் ரிஷிகளாகவும் இருந்தார்களாம் இவன் காலத்தில் மகாவிஷ்ணு ரிபு அல்லது துடிதன் என்ற பெயருடன் அவதரித்தாராம். அப்போது ரோசநன் என்பவன் இந்திரனாக இருந்தானாம்.

(3) உத்தம மனு. இவன் பிரியவிரதனுக்கு மகனும் சுவாயம்பு மனுவுக்குப் பேரனுமாவான். இவனுக்கு பத்திரர், வேதசுருதர், சுதாமர், சத்தியர், சிவர், பிரமார்த்தனர், வசவர்த்தி ஆகியவர்கள் குடிகளாகவும்; சுதபன், சபநன், மகன், சுக்ரன, பிரமதன் ஆகியவர்கள் ரிஷிகளாகவும் இருந்தார்களாம். இம் மூன்றுவது மனுவுக்குப் பிள்ளைகள் இருந்ததாகத் தெரியவில்லை. இவன் காலத்தில் சத்தியசேனை என்பவளிடம் மகாவிஷ்ணு சத்தியசேநர் என்ற பெயருடன் அவதரித்தாராம். சத்தியசித் அல்லது சுசாந்தி என்பவன் அப்போது இந்திரனாக இருந்தானாம்.

(4) தாமச மனு. இவன் சுராஷ்டிரன் என்னும் அரசனுக்கு, அவனுடைய மனைவி உற்பலாவதி என்பவள் மிருகமாக இருக்கும்போது பிறந்தவனாம். இவன் உத்தமன் என்கிற 3-வது மனுவுக்கு அண்ணனாம். இவன் ஒருகாலத்தில் அகஸ்தியனால் யானையாகச் சபிக்கப்பட்டானாம். இவனுக்கு துதி, போதன், தாபன், சௌதபசியன், தபசூலன், தபோவதி, கல்மாஷன், தன்வி, தன்விகுலன் ஆகியவர்கள் பிள்ளைகளாகவும்; வைத்ருதர், சுரர், சத்தியர், மருவியர், சுதையர், சோமபர் ஆகியவர்கள் குடிகளாகவும்; சோத்தி, தாதா, பிருது, காவியன், சயித்திரன், இதன், தாரிகன், பீவரன் ஆகியவர்கள் ரிஷிகளாகவும் இருந்தார்களாம். இவன் காலத்தில் மகாவிஷ்ணு ஸ்ரீஅரி என்ற பெயருடன் அவதரித்தாராம்.

இப்படியாக 5-வது ரைவத மனு, 6-வது சாக்ஷுஷ மனு, 7-வது வைவசுத மனு, 8-வது சூர்யசாவர்ணி மனு, 9-வது ரைப்பியன் அல்லது தக்ஷசாவர்ணி மனு, 10-வது பிரமசாவர்ணி மனு, 11-வது தர்மசாவர்ணி மனு, 12-வது ருத்ரசாவர்ணி மனு,

13-வது தேவசாவர்ணி மனு, 14-வது இந்திரசாவர்ணி மனு, அல்லது பௌமிய மனு என, பல மனுக்களைப் புராணங்கள் கூறுகின்றன. இவர்களுடைய வரலாறுகள் முழுவதையும் கிரமமாக விவரிப்பதென்றால் அது ஓர் பெரிய புராணமாக முடியும். எனவே, நாம் இங்கு அவசியமானவர்களைமட்டும் ஆராய்வோம்.

இம் மனுக்கள் பல பேர்களில் முதல் மனுவாகிய சுவாயம்பு காலத்தில் நரகாசுரன் பிறந்தான் என்று முன்பு கூறியது கவனத்தில் இருக்கலாம். 8-வது மனு சூர்யசாவர்ணியின் காலத்தில், வியாசர், பரசுராமர், அசுவத்தாமா, பிருது, கிருபாச்சாரி, இருச்யசிருங்கர், கீர்த்திமான், கார்க்கியர், தாதா, அக்னி, ஜன்மியர், கபீனகர், கபீவான் ஆகிய பதின்மூவரும் ரிஷிகளாக இருந்தார்களாம். இந்த ரிஷிகளில் வியாசர், பரசுராமர், அசுவத்தாமா, கிருபாச்சாரி ஆகியநால்வரும் பாரதத்தில் வரிக்கு வரி காணப்படுகின்றனர். இந்த நால்வரும் பாரத யுத்தம் முடிந்த பிறகுங்கூட இறந்ததாகத் தெரியவில்லை. இவர்களில், அசுவத்தாமாவும் வியாசனும் சாகாவரம் (சிரஞ்சீவி) பெற்றவர்கள். பாரத யுத்தத்திற்கே மூல காரணம் கிருஷ்ணன் தான் என்பதை எல்லோரும் அறிவர். எனெனில்;—

பாராழி அபலமறப் பாண்டவர்தம் துயர்தீர
பார்த்தன் வாழப்
போராழி துயிலாது பெருமிதமு முடன்மறந்து
பிறந்த மாயன்

என்று பாரதம் கூறுகிறதல்லதா? பூமி பாரத்தை நீக்குவதற்கென்றே வைகுந்தத்தை விட்டு பூமியிற் பிறந்தவனல்லவா கிருஷ்ணன்? அதே கிருஷ்ணன்தான், நரகாசுரனைக் கொன்றவன் என்பதை நாம் இங்கு கூற வேண்டியதில்லை.

இதில் நாம் ஆராயவேண்டியது என்னவென்றால், நரகாசுரன் பிறந்த பின்னால், சுவாயம்பு மனுவிலிருந்து சூர்யசாவர்ணி மனு வரை, முறையே ஏழு மனுக்களின் ஆட்சி முடிந்து, எட்டாவது மனுவின் ஆட்சி நடந்துகொண்டிருந்தது என்பதேயாகும். எப்படியெனில்; கிருஷ்ணவதார காலமும் பாரத யுத்த காலமும் பரசுராமர், வியாசர், அசுவத்தாமா, கிருபாச்சாரி ஆகியவர்கள்

வாழ்ந்தகாலமும் ஒன்ருக இருப்பதால், மன்வாந்தர முறைப்படி அந்தக் காலம்,8-வது மனுவாகிய சூர்யசாவர்ணியின் காலந்தான் என்பது நிச்சயமாகும்.

இந்த மனுமுறைப்படி நரகாசுரன் எவ்வளவு காலம் உயிரோடு இருந்தான் என்பதைக் கணக்கிட்டால் குறைந்த மதிப்பாகக் கொண்டாலும் ஏழு மன்வாந்தர காலம் என்பதை நாம் கூறவேண்டிய அவசியமில்லை. இந்த ஏழு மன்வாந்தர காலத்தையும் வருஷமாகக் கணக்கைப் பெருக்கிப் பார்த்தால் மொத்தம் 54 கோடியே 43 லக்ஷத்து 20 ஆயிரம் வருஷங்களாகும்.

ஒரு மன்வாந்தர மொத்த வருஷம்	7,77,60,000
7 ஆல் பெருக்க	7
நரகாசுரன் ஆயுள் வருஷம்	54,43,20,000

இத்தனை கோடி வருஷம் வரை நரகாசுரன் உயிரோடிருந்தது ஆச்சரியமாகவே இருக்கிறது. ஒவ்வொரு மனுவின் ஆட்சிக் காலத்திலும் வாழ்ந்து வந்தவர்களான, கடவுளிடம் நேராகப் போய் வரக்கூடியவர்கள் என்று சொல்லப்படுகிற, ரிஷிகள், தபோதனர்கள்கூட அடுத்த மனுவின் ஆட்சி காலத்தில் அழிந்து மறைந்துபோயிருக்கிருர்கள். அவர்களுடைய ஆயுளே அவ்வளவில் இருக்க நரகாசுரன் மட்டும் இவ்வளவு காலமும் உயிர் வாழ்ந்தது அற்புதமல்லவா? இராவணனைப்போல, சூரபத்மனைப் போல, இரண்யனைப்போல, ஆயுளை நீடிக்க வேண்டி கடவுளர்களிடமிருந்து நரகாசுரன் ஏதாவது வரம் வாங்கி வந்ததாகவும் ஆரியப்புலவர்கள் எழுதி வைத்தார்களில்லை, தெய்வீகம் என்கிற சரடு கோர்த்துத் தைக்கப்பட்ட பொய் மூட்டைகளை யார் அவிழ்த்துப் பிரித்துப் பார்க்கப் போகிருர்கள்? என்கிற தைரியத்தால் புளுகு மூட்டைகளின் உட்சரக்கு வெளியில் தெரியாதபடி பொருத்தமாகத் தைக்கப்பட்டிருக்கிறதா? என்று ஆராய மறந்துவிட்டார்கள் போலும்! என்னே பித்தலாட்டம்!!

இங்கு இன்னொரு முரண்பாட்டையும் விளக்க வேண்டியது அவசியமாகிறது. என்னவென்ருல்;- கிருஷ்ணவதார காலமும், பாரத யுத்த காலமும், நரகாசுரன் இறந்த காலமும் 8-வது மனுவாகிய சூர்யசாவர்ணியின் காலந்தான் என்பதை

முன்னர் நிச்சயித்தோம். அதைக்கவனத்தில் வைத்துக்கொண்டு தற்காலம் நடப்பது 22-வது வைவசுதமனுவின் காலம் என்பதை யும், கவனத்தில் வைத்துக்கொண்டு, பாரத யுத்தம் எப்பொழுது நடந்ததென்று ஆராய்ந்தால், பாரத யுத்தமானது தற்போது நடைபெறும் கலியுக ஆரம்பத்திலும், அதாவது ஐயாயிரத்துச் சில்லறை வருஷங்களுக்கு முன்பு, துவாபரயுகத்தின் கடைசியில் நடந்ததாக முடிவு கட்டலாம். எப்படி எனில், பாரத யுத்தம் முடிந்தபிறகு பாண்டவர்கள் அஸ்தினபுரத்திலிருந்து 36 வருஷம் அரசு செய்தார்கள் என்றும், அக்காலத்தில் ஒரு பார்ப்பான் தன்னுடைய மனை நிலத்தை இன்னொரு பார்ப்பானுக்கு விற்ற தாகவும், அந்த நிலத்தை வாங்கிய பார்ப்பான், அதிலிருந்து ஒரு புதையல் எடுத்ததாகவும், அந்தப்புதையல் நிலம் விற்றவனுடைய முன்னோர்களால் வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று கருதி நிலம்விற்ற பார்ப்பானிடம் போய்ப் புதையலை ஒப்புக்கொள்ளச் சொன்னதாகவும், அதற்கு அவன், நிலத்தை என்றைக்கு விற்றுய் விட்டதோ, அன்றைக்கே அதில் கிடைக்கக்கூடிய இலாபத்தையும் நஷ்டத்தையும், நிலம் வாங்கியவனே அனுபவிக்க வேண்டும் என்ற நியாயம் கூறி, புதையலைப் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டதாகவும், உடனே புதையல் எடுத்த பார்ப்பான் புதையல் யாரைச் சேரவேண்டும் என்று, அரசன் தீர்ப்பளிக் கிறனே, அவர்கள் புதையலைப் பெற்றுக் கொள்வதென்று நிலம் விற்ற பார்ப்பானை உடன்படச் செய்து, இருவருமாகச் சென்று தருமராஜனிடம் தங்களுடைய வழக்கைக்கூறி நியாயம் கேட்ட தாகவும், அதற்கு தருமராஜன் நாளைக்கு வந்தால் யோசனை செய்து தீர்ப்புக் கூறுகிறேனென்று, பார்ப்பனர்களை அனுப்பி விட்டதாகவும், மறுநாள் விடிவதற்குள் இரண்டு பார்ப்பானும், புதையல் தனக்கே சேர வேண்டுமென்று தருமராஜனிடம் வழக் குரைத்ததாகவும், நேற்று வரையிலும் புதையலை இருவரும் வேண்டாமென்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் விடிவதற் குள் பொருளாசை பிடித்துப் புதையலைப் பெற முயற்சிப்பதைக் கண்ட தருமராஜன், திகைத்து, அன்றைக்கே கலி யுகம் பிறந்து விட்டதென்றும், அதற்கு மேல் உலகத்தில் நல்ல நீதி காண முடியாதென்றும் கருதி, சிறுவனை இருந்த பேரன் பரீட்சித்து விடம் அரசாட்சியை ஒப்பித்து விட்டு, தருமராஜனும், தம்பிமார்க

னும், பாஞ்சாலியும், சுவர்க்கத்துக்குப்போனார்கள் என்று, பாரதம் கூறுகிறது.

நாம் இதை இங்கு கூறியது, மக்களின் நிலையற்ற பேச்சுக்கும், நீதிப்புரட்டுக்கும், காலத்தைக் காரணமாகக்காட்டி கலியுகத்தின் மீது பழியை ஏற்றி, தன்னுடைய அரசாட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த தருமனுடைய அறியாமையை ஆராய்வதற்கல்ல. அதனை, பாரத ஆராய்ச்சியாளர்க்கு விட்டு விடுவோம். இப்போது, கலியுகத்தின் ஆரம்ப காலமும் தருமனின் ஆட்சி முடிவுக் காலமும் ஒன்றென்று காட்டவே இக் கதையை இங்கு கூறினோம்.

இந்த ஆதாரத்தின்படி பார்த்தால், இப்பொழுது கி. பி. 1947. கலியுகம் ஆண்டு 5049. இத்துடன் பாண்டவர்களின் யுத்த பிற்கால ஆண்டு 36 ஐயும் கூட்டினால் பாரதயுத்தம் முடிந்து 5085 ஆண்டுகளாகும். அதாவது கி. மு. ஆண்டு 3138. துவாபர யுகம் ஆண்டு 8,63,964 என்றாகும். பஞ்சாங்க கணிதர்கள் குறிப்பிடும் பாண்டவ சகாப்தம் ஆண்டும் ஏறக்குறைய இவ்வளவே என்பது, இங்கே கவனிக்கத்தக்கது.

இதிலிருந்து, நரகாசுரன் இறந்த காலம் பாரத யுத்த ஆரம்பத்திற்கு சில வருஷங்களுக்கு முந்தியதாகவே இருக்க வேண்டுமென்பதும் எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

காலமும் கணக்கும் இவ்வாறிருக்க, இப்பொழுது 22-வது வைவசுதமனுவின் காலமென்றால், இதற்கும்8-வதுசூரியசாவர்ணி மனுவின் காலத்திற்குமிடையில், பல மன்வாந்தரங்கள் முடிந்து போயிருக்க வேண்டும், என்று கருத இடமுண்டாகிறதல்லவா? இந்த முரண்பாட்டுக்கு, வைதீகர்களும், புராணீகர்களும் என்ன சமாதானம் சொல்வார்களோ அறிகிலோம். ஒரு வேளை பல்லாயிரங்கோடி ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நரகாசுரன் இருந்தான். அவனைப்போலவே 5000 ஆண்டுகளுக்கு முன்னும் ஒரு நரகாசுரன் இருந்தான் என்று பொய் மூட்டை மேல் பொய் மூட்டையாக ஏற்றி அடுக்கி வைக்கத் துணிவார்களோ என்னவோ. ஆனால், சூரிய கோளத்திலிருந்து பிரிந்து வந்த இந்தப்பூமியில் 50 லக்ஷம் ஆண்டுகளுக்கு முன்னால் மனிதர்களே

இருக்கவில்லை என்று பூமிநூல் வல்லவர்கள், அறுதியிட்டு உறுதியாகச்சொல்கிறார்கள் என்பதை நமது புராண மூட்டைப் புளுகர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

பூமி சுருண்ட அற்புதம்.

நாம் இதுவரையும், நரகாசுரன் பிறந்து உயிர் வாழ்ந்து இறந்து போனதற்கிடையே உள்ள காலப் புரட்டை ஆராய்ந்தோம். இனிப் பூமியைச் சுருட்டக் கூடிய அசுரன் இருந்ததும் அவனைக் கொல்ல மகாவிஷ்ணு பன்றியாகி வந்ததும்பற்றி ஆராய்வோம்.

சூரியனிலிருந்து 9 கோடியே 20 லக்ஷம் மைல்களுக்கு அப்பாலுள்ள 3-வது வட்டத்தில் இருந்துகொண்டும், தனக்குத் தானே சுழன்றுகொண்டும், சூரியனையும் சுற்றிக் கொண்டும் 19 கோடியே 69 லக்ஷத்து 40 ஆயிரம் சதுரமைல் அளவு கோளப் பரப்பின் விரிவுகளை உடையதாகவும், 79 ஆயிரத்து 265 மைல் குறுக்களவு உடையதாகவும், 6000000000000000000000 டன் கனமுள்ளதாகவும், உருண்டை வடிவமாகவும், இருக்கிறதென்று பூமி நூல் ஆராய்ச்சியாளர்கள், அற்புதமான தூரதிருஷ்டிக் கண்ணாடிகளைக் கொண்டும், பற்பல விதமான கருவிகளைக் கொண்டும், பலவிதமான சோதனையிட்டு முடிவுசெய்து அறிவாளிகள் மத்தியில், சிறு குழந்தைகளும் புரிந்துகொள்ளும் விதத்தில் மெய்ப்பித்துக் காட்டப்பட்ட, இந்தப் பரந்த பெரிய பூமியைப், பாயைச் சுருட்டுவது போலச் சுருட்டிக்கொண்டு இரண்யாக்ஷன் பாதாளத்திற் போய் ஒளிந்துகொண்டான் என்றால்; எப்படிச் சுருட்டினான்? பூமி உருண்டை வடிவம் ஆயிற்றே, எவ்வாறு சுருட்ட முடிந்தது? எதற்காகச் சுருட்டினான்? சுருட்டவேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? எங்கே நின்றுகொண்டு சுருட்டினான்? அவனும் பூமியின் மேல் தானே நின்றுகொண்டு சுருட்டவேண்டும்! எங்கிருந்து சுருட்டினான்? பூமியைச் சுருட்டினவன் பாதாளத்தில் போய் ஒளிந்துகொண்டான் என்றால்; எதற்காக ஒளியவேண்டும்? மனிதர்கள் முதல் சகல பிராணிகளும் பூமிச்சுருட்டுக்குள் அகப்பட்டு மாண்டவைகளும், மரண வேதனையில் இருப்பவைகளுமாக, இருக்க

வேண்டுமே? அவன் யாருக்காக ஒளிய வேண்டும்? உண்மையாகவே, இரண்யாக்ஷன் பூமியைச்சுருட்டி இருப்பான் என்றே வைத்துக் கொண்டாலும் கூட, அவன், இந்தப் பூமியில் பிறந்து வளர்ந்தவனாக இருக்கமுடியாது. ஏனெனில், இவ்வளவு பெரிய மண்ணாங்கட்டியை, எளிதாகச் சுருட்டி எடுத்துப்போகக்கூடிய ஒருவன், உருவத்தில் இந்தப் பூமியை விட குறைந்த மதிப்பு 3 மடங்கு அதிகப்பட்டவனாகவும், கனத்தில் இந்தப் பூமியைவிட மூன்றில் ஒரு பங்கு கனமுடையவனாகவும் இருக்க வேண்டும் அல்லவா? இவ்வாறு, பூமியின் தோற்றத்தைவிட, 3 மடங்கு பெரிய தோற்றத்தையுடைய ஒரு மனிதன், இந்தப் பூமியின்மேல் வசிப்பானானால், இந்தப் பூமியில் விளையும் விளை பொருள்கள், அவன் உணவுக்காவது போதுமா? அத்தனை பெரிய மனிதனுக்கு வீடு கட்டவாவது முடியுமா? அவனுக்குத் தேவையான அளவு வீடு கட்ட, இந்தப் பூமியிலுள்ள சமுக்திரங்களையெல்லாம் மூடி விட்டு, அஸ்திவாரம் போட்டாலும் இடம் போதுமா? இரண்யாக்ஷன் பூமியைச் சுருட்டும்போதும், விஷ்ணுப் பன்றி, விரிக்கும் போதும், இந்தப் பூமியும், இதிலிருந்த ஜீவ கோடிகளும், நொறுங்கிப்போகாமல் இருக்கமுடியுமா? எப்படி நொறுங்காமல் இருக்கமுடியும்? பூமியானது ரப்பர் பாலால் வார்க்கப்பட்டதா? இவைகள்தான் இப்படிக் கேலிக்கிடமாய் இருக்கிறதே என்றால்; மகாவிஷ்ணுவின் அறிவும், சக்தியும், மானக்கேடாக இருக்கிறது. மகா விஷ்ணுவுக்கு கடவுள் தன்மையும், சக்தியும் இருந்தால், இரண்யாக்ஷனைக் கொன்று தான் பூமியை மீட்க வேண்டுமா? அவன், தானாகவே இருந்த இடத்தில், பூமியைக் கொண்டுவந்து, விரித்து வைக்கும்படியான மன மாற்றத்தைச் செய்யமுடியாத ஒருவன், கடவுள் உத்தியோகத்தில் இருப்பது மானக்கேடாக இல்லையா? அதுதான் போகட்டும், ஆலோசனை இல்லாமல் நடந்து கொண்டார் என்றால், இரண்யாக்ஷனைக் கொல்வதற்கு, பன்றி வடிவத்தோடுதானா செல்லவேண்டும்? மகாவிஷ்ணுவின் தன்மை தான் இப்படி என்றால்; பூமி தேவியின் நிலைமையும், அவள் ஒழுக்கமும், வெட்கக்கேடாக இருக்கிறது. அவளுடைய காமஇச்சை பன்றியின் மீதா ஏற்பட வேண்டும்? மகாவிஷ்ணு, பன்றி வடிவத்தில் இருந்து மாறி, மகாவிஷ்ணுவாக இருக்கும் போது, தன்னுடைய காம இச்சையை, அவருக்கு உணர்த்தி

நிறைவேற்றிக் கொள்ளும் வரை, பூமி தேவிக்குப் பொறுக்க வில்லையா?

இத்தகைய, சிக்கலான கேள்விகளுக்கெல்லாம் புராணப் பண்டிதர்களும், வைதீகர்களும், என்ன பதில் சொல்வார்களோ அறிகிலோம். இந்து மதத்தின் வண்டவாளத்தை, நன்கறியாத அமெரிக்கர்நாட்டிலே சென்று, விவேகானந்தச்சாமியார், இந்து மதத்திற்கு இணையான மதம், உலகத்தில் இல்லை என்று நிலை நாட்டிவிட்டார் என்பதைக் கேள்விப்பட்டு, இறுமாப்படையும், பக்த கோடிகளே! நாம் கேட்பதற்கு, திரிகாண சுத்தியாகப் பதில் கூறுங்கள். இந்து மதம் என்ற, இரும்புக் கம்பிக்கு பௌத்தமத முலாம் பூசி, அமெரிக்கப்பேதையர் மத்தியில் கூறி, வென்று விட்டால், இரும்பான இந்து மதம், ஒருக்காலும் தங்க மாகாது, என்பதை ஒப்புக்கொண்டு, ஆபாசங்களை ஒழிக்க முற் படுங்கள். வீண் பெருமையை வீழ்த்துங்கள். நாங்கள் கூறுவது உங்களுக்கு வேற்றுமையாகத் தோன்றினல், அன்றைக்கு விவே கானந்தசாமியார், வெற்றிக் கொடி நாட்டிய அமெரிக்க நாட் டிற்கு, இன்றைக்கு, இந்த இரண்யாக்ஷன் கதையை எழுதி, அதன் கீழ் எங்கள் இந்து மத அன்பர்கள்; ஆண்டுகள் தோறும் ஐப்பசி மாதத்தில் தீபாவளி கொண்டாடுவதற்கு மூல காரண மான, திவ்ய கதை இதுதான் என்று, விளக்கமுங் காட்டி, சமீப காலத்திற்குள் சைவமெய்யன்பராக மாறிய, சென்னைக் கவர்னர் தோழர். ஆர்ச்சிபால் நை அவர்களிடம், ஒரு அத்தாக்ஷியும் வாங்கி, இரண்டையும் சேர்த்து அனுப்பிப் பாருங்கள்.

கவர்னர் அத்தாக்ஷி இல்லாமல் அனுப்பி விடாதீர்கள். ஏனென்றால், யாரோ குடிவெறியனோ. அல்லது பைத்தியக் காரனோ, இந்தியாவில் இருந்து முட்டாள்தனமான கதையை அனுப்பி இருக்கிறான், விவேகானந்தர் பிறந்த தேசத்தில் இத் தகைய மடத்தனம் இருக்க முடியுமா? என்று கருதிக் கொண்டு ஒன்றும் பதில் எழுதாமல் இருந்து விடுவார்கள். எனவே; கவர்னர் அத்தாக்ஷியுடன் எழுதுங்கள், அடியிற் கண்ட பதில் வரும். அமெரிக்கர்களின் அபிப்பிராயம் தெரிந்த பிறகாவது, நம்முடைய புராணங்கள் கேலிக்கிடமாக இருக்கின்றன என்று தெரிவீர்கள்.

தேதி ....

அமெரிக்கா.

அன்புள்ள ஐயா!

தங்கள் தெய்வீகக்கதையும், கவர்னர் அத்தாக்ஷியும் வரப் பெற்ருேம். அது, தெய்வீகக் கதையாக இருப்பதனுலோ, என்னவோ, அதன் கருத்துக்கள் ஒன்றும் விளங்க வில்லை. கவர்னரின் அத்தாக்ஷி இல்லையானுல், நாங்கள் அதைக் கவனி யாமலே விட்டிருப்போம். தாங்கள், முன் யோசனையுடன் கவர்னர் அத்தாக்ஷி வாங்கி அனுப்பியதற்குப் பாராட்டுகிருேம். தங்கள் மதத்தின் முக்கியமான கதை யொன்றை, எங்களுக்குச் சிரமம் பாராட்டாமல் எழுதி அறிவித்ததற்காக நன்றி கூறுகிருேம்.

இப்படிக்கு

....

இம் மாதிரி, அமெரிக்கர்களை கேட்பது சரியில்லை என்று தோன்றினுல், இந்தியாவைத் தவிர்த்த, எல்லா தேசத்தாருக்கும் கீழ்க்கண்டபடி எழுதிக் கேட்டுப் பாருங்கள்;-

ஒரு காலத்தில், இரண்யாக்ஷன் என்கிற அசுரன் நாம் வாழுகின்ற பூமியைச் சுருட்டிக் கொண்டு போனதாகவும், அதை எங்கள் மகாவிஷ்ணுக் கடவுள் மீட்டிக்கொண்டு வந்ததாக வும், எங்களுடைய தெய்வீகப் புராணங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட சம்பவம், எப்பொழுதாவது உலகத்தில் நடந்த தாக, உங்கள் நாட்டு சரித்திரங்களில் காணப்படுகிறதா? என்று, எழுதிக் கேட்டுப் பாருங்கள். அயல் நாடுகளில் இருந்து நம் முடைய மூட நம்பிக்கையைப்பற்றி எத்தனை கேலிக் கடிதங்கள் வருகின்றன, என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

நாம் எவ்வளவு பைத்தியக்காரத் தனமான கதைகளை யெல்லாம் பெருமையுடன் காப்பாற்றி வருகிருேம் என்பதை எடுத்துக் காட்டவே, இத்தனையும் சொன்னேம். இனி, நரகா சுரன் என்பவன் யார்? அவன் வாழ்ந்த நாடு எது? என்பவை களை ஆராய்வோம்.

நரகாசுரன் யார்?

நரகாசுரன் யார்? அவன் எந்த இனத்தைச் சேர்ந்தவன்? என்பவைகளை ஆராய வேண்டுமானல், முதலாவது அவன் வாழ்ந்த நாடு எது? அந்த நாட்டில் அக் காலத்தில் எந்த இனத்தார் வாழ்ந்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன? ஆராய்ச்சியாளர்கள் என்ன கூறுகிறார்கள்? என்பவைகளையே, பெரிதும் துணை கொண்டு செல்ல வேண்டும். இவ்விடத்தில், புராணங்கள் சரியான வழிகாட்டியாக இருக்காது. ஆனல், புராணங்களில் வரும் சூசகமான குறிப்புக்களை வைத்துக் கொண்டுதான் சரித்திர ஆராய்ச்சியில் நுழைய வேண்டும் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

இவ்வாறுக, முதலில் நரகாசுரனுடைய இராஜதானியாகிய பிராக்ஜோதிஷபுரம் எங்கிருந்தது, என்பதைக் கண்டுபிடிப்போம். ஆரியவர்த்தத்திற்குத் தென்கிழக்கில் உள்ள காமரூப தேசத்தில், பிராக்ஜோதிஷபுரம் என்கிற பட்டினம் இருந்ததாகவும், அதுவே, நரகாசுரனுடைய பட்டினமென்றும், சாலிய அந்தணர் புராணத்திலுள்ள குறிப்புரை யொன்று கூறுகிறது. அதை யொட்டியே சிங்காரவேலு முதலியார் திரட்டிய அபிதான சிந்தாமணியிலும் பிராக்ஜோதிஷபுரம் என்பதற்கு விளக்கம் கூறுமிடத்தில் Kamarup or Kamakshya in Assam என்று குறிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் என்னவென்றல் பிராக்ஜோதிஷபுரம் என்பது அஸ்ஸாம் மாகாணத்தில் இருக்கிற காமாக்ஷியம் அல்லது காமரூபம் என்பதேயாம். அதாவது தற்காலம் அஸ்ஸாம் மாகாணத்தின் ஒரு பகுதியே முன் காலத்தில் காமரூப தேசம் அல்லது காமாக்ஷிய தேசம் என்று சொல்லப்பட்டு வந்தது. இந்தக் காமரூப தேசத்தின் ஒரு பட்டினத்தையே பிராக்ஜோதிஷபுரம் என்று அழைக்கப்பட்டு வந்தது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இனி, சில புராணங்களில் நரகாசுரன் மாகிஷ்மதியில் இருந்தானென்றும், சிலவற்றில் பிராக்ஜோதிஷபுரத்தில் இருந்தானென்றும், இரண்டு விதமாகக் கூறப்படுகின்றன என்பதை, முன்பு, நாம் நரகாசுரன் வரலாறு என்ற தலைப்பின் கீழ்க்

கூறினேம். ஆனல், நரகாசுரன் அரசு செலுத்திய இடம் பிராக்ஜோதிஷபுரம் தான், என்று பெரும்பான்மையான புராணங்கள் கூறுவதாலும், நரகாசுரன் மகனுகிய பகதத்தன் என்பவன் மாகிஷ்மதியை ஆண்டதாகச் சில புராணங்கள் கூறுவதாலும், நரகாசுரனுடைய ஆட்சி மாகிஷ்மதி வரையிலும் பரவி இருந்தது என்று யூகிக்கலாம்.

மாகிஷ்மதி என்பது, பிராக்ஜோதிஷபுரத்திலிருந்து மேற்குத் திசையில் நருமதை ஆற்றங்கரையைச் சேர்ந்த பட்டினம் என்று தெரிகிறது. அதாவது தற்காலம் மத்தியமாகாணத்தின் வட பகுதியில் இருக்கின்ற ஜபல்புரி, நரசிங்கபுரி இவைகளுக்குச் சமீபத்தில்தான், மாகிஷ்மதியும் இருக்கவேண்டுமெனத் துணியலாம்.

இவ்வாறு, நரகாசுரனுடைய ராஜ்ஜியம், மேற்கே விரிந்து கிடந்ததால் அந்தப் பகுதிக்கு, மாகிஷ்மதியைத் தலைநகராக்கி, பகதத்தனை வைஸ்ராயாக நியமித்திருக்க வேண்டுமென்பதே, சரியான யூகமாகும்.

இதுகாறும், நரகாசுரன் அரசாண்ட இடத்தை, ஒருவாறு நிச்சயம் செய்தோம். இனி, அவன் எந்த இனத்தைச் சேர்ந்தவன், என்பதை ஆராய்வோம்.

புராணங்களில், அவன், பூமிதேவிக்கும் மகாவிஷ்ணுவுக்கும், பிறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் உண்மை என்னவென்று தெரிந்து கொள்வோம். ஆரியப்புலவர்கள் எழுதி வைத்த புராணங்களில், அவர்களுடைய பகைவர்களில் பெரும் பாலோரை, ஆரியர்களுக்குப் பிறந்தவர்களாகவே கூறி இருக்கிருர்கள். சிலரைப்பற்றி, பிறப்பு விவரம் ஒன்றும் கூருமலே விட்டிருக்கிருர்கள். உதாரணமாக; சூரபத்மனுதியர் எல்லாரும், மாயை என்கிற அசுரப்பெண்ணுக்கும், காசிபன் என்கிற ஆரியனுக்கும், பிறந்தவர்களாகக் காட்டியுள்ளனர். இராவணன், கும்பகர்ணன் முதலியவர்கள், கேகசி என்கிற அசுரப்பெண்ணுக்கும், விசிரவசு என்கிற, ஆரியனுக்கும் பிறந்ததாக எழுதியுள்ளனர். பகாசுரன், இடும்பாசுரன், முதலியவர்களைப்பற்றிய

வரலாறு, காணப்படவே இல்லை. இம்மாதிரி, அவர்கள் எழுதி வைத்த நோக்கம் என்னவெனில், அவர்களுடைய பகைவர்களின் தாய்மார்களுக்கு, இழிவு கற்பிக்கவேண்டுமென்ற, கயமைக் குணந்தவிர வேறில்லை. அத்துடன், இந்தப் புராணங்கள் எல்லாமே, முதலில், சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டு, அவைகளை, நீண்ட நாள்வரை, ஆரியர்களைத்தவிர, மற்றவர்களுக்குத் தெரியவொட்டாமல், மறைத்து வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. காரணம்; அவர்கள், மத்திய ஆசியாவிலிருந்து இந்நாட்டுக்குப் பிழைக்க வந்தவர்கள். பிழைக்க வந்த இடத்தில், இந்நாட்டுப் பூர்வ குடிகளாகிய திராவிடர்களுக்கும், அவர்களுக்குப், பழக்க வழக்க நாகரீக வேறுபாடு காரணமாகப், பகைமூண்டது. காலக்கிரமத்தில், ஆரியர்களுக்கு ஆதிக்க வெறியும், மண்ணாசையும், உண்டாயிற்று. இந்தப் புகைச்சலால், திராவிடர்களை வென்றாலன்றி, ஆரியர்களுக்கு, இந்நாட்டில் சுக வாழ்வுக்கு இடமில்லை என்ற, நிலைமையும் ஏற்பட்டது. இதனால் ஆரியக் கூட்டத்தில், திராவிடப் பகையுணர்ச்சியை, வளர்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. எப்படிப் பகை உணர்ச்சியைத் தூண்டுவது? திராவிட மன்னர்களின் செங்கோலும், செல்வாக்கும், போர்த்திறமும், படைபலமும், சிறந்தோங்கி இருந்தது. ஆரியர்கள், விரோத உணர்ச்சி கொண்டிருக்கிறார்கள், என்று திராவிட மன்னர்களின் செவிக்கெட்டினால், ஒரே நாழிகையில் புழுக்களை நசுக்குவதுபோல் நசுக்கி விடுவார்கள். செல்வாக்குக்குப் பயந்து பேசாமலிருந்தால், ஆரியர்கள் என்றைக்கும் அஞ்சி, அடங்கி, அன்னியர்களாகவே வாழ நேரிடும். ஆரியக்கூட்டத்தில், பகை உணர்ச்சி வளர்க்கப்படா விட்டால், திராவிடர்களின் நீதிகளிலும், நேர்மைகளிலும், ஆரியர்கள் மயங்கி வசப்பட்டுப் போய்விடுவார்கள். எனவே, ஆரியத்தலைவர்களும், புலவர்களும் கூடி, யோசனை செய்து, நயவஞ்சகமுறையால், இந்நாட்டுத் திராவிட மன்னர்களை நசுக்கவேண்டுமென்று, திட்டம் செய்து கொண்டார்கள். நண்பர்களைப்போல, அடிமைகளைப்போல நடந்து, உளவறிந்து, சமயம் வாய்த்தபோது, அடையாளம் காணமுடியாமல் மாறு வேடமிட்டுக்கொண்டு, திறமை மிகுந்த திராவிட மன்னர்களைக் கொலைசெய்து விட்டு, கொலையுண்டிறந்த திராவிட மன்னர்கள் மீது, ஆரியர்களுக்குமட்டும் விளங்கத்தக்க

விதத்திலும், வெறுப்புண்டாகும் விதத்திலும், இழிவான புனை பெயர்களிட்டு, மகா கொடியவர்களாகக் கட்டுக்கதைகள் எழுதித், திராவிடப் பகை உணர்ச்சியை வளர்க்கும் பொருட்டுத் தங்களுக்குள் பரப்பி வந்தார்கள். இத்தகைய, கட்டுப்பாடான, நயவஞ்சகக் கொரில்லா யுத்த முறையால், கொலை செய்து விட்டுக்கட்டிவிட்ட, கட்டுக்கதைகளில் ஒன்றுதான், மகாவிஷ்ணு வின் பன்றியவதாரக் கதையும் என்பதை, நாம் நினைவில் வைக்க வேண்டும். எப்படி எனில்;- 1-வது சுவாயம்புமனுவின் காலத் தில், மகாவிஷ்ணு என்கிற ஆரியன், பன்றி வேடமிட்டுச்சென்று இந்தியாவை ஒரு குடைக்கீழ் அரசாண்ட, இரண்யாக்ஷன் என்கிற திராவிட மன்னன், வேட்டையாடவோ, வேறு காரண மாகவோ, தனித்து வந்து; காட்டிலுள்ள ஏதோ ஒரு பள்ளத்தில் நிற்கும் சமயம் பார்த்துத், திடீரென்று தாக்கிக் கொலை செய்து விட்டு, அவனுடைய, அரசாட்சியைக் கைப்பற்றிக் கொண்ட உண்மையைத்தான், பரிபாஷை முறையில், கதை கட்டியிருக்க வேண்டும். இந்தப் பரிபாஷை முறையைக் கொஞ்சம் விளக்கிக் கொண்டு மேலே செல்வோம்.

இரண்யாக்ஷன் செய்த குற்றம் என்ன? பூமி, சுருட்டி வைக்கும் பொருள் அல்லவென்று, அந்தக்காலத்துக் குழந்தை களுக்கும், இந்தக்காலத்துக் குழந்தைகளுக்கும் தெரியும். அதன், உட்பொருள் என்னவென்றால்; இரண்யாக்ஷன் இந்தப் பூமிக்கு ஏகசக்ராதிபதியாய் இருந்தான் என்பதேயாகும். ஒவ்வொரு அடி நிலமும், அவன் கொற்றக் குடை நிழலின் கீழ் இருந்தது. இந்த நிலைமை, மண்ணாசையும், ஆதிக்க வெறியும் கொண்ட, ஆரியருக்குச் சாதகமாக இருக்க முடியுமா? எனவே, சுவாயம்பு என்கிற ஆரியத்தலைவன், விஷ்ணு என்கிற கொலைபாதகனைக் கொண்டு, இரண்யாக்ஷனைக் கொல்வித்து, அரசாட்சியைக் கைப்பற்றினான், என்பதே பரிபாஷையின் உட்பொருளாகும். காலத்தையும் ஒப்பு நோக்குங்கள். 1-வது சுவாயம்புமனுவின் காலம் என்றால்; அதற்கு முன்னால், ஆரியர்களுக்கு இந்நாட்டில் ஆட்சி முறை ஏற்படவில்லை என்றே அர்த்தம். இத்தகைய, கொரில்லாப் போர்முறைக்குப் பட்டாளம் சேர்க்கும் நோக்கத் துடன் எழுதப்பட்ட பரிபாஷைக் கதைகளில், உண்மையான பெயர், ஊர், காலம் முதலியன காட்டி எழுத முடியுமா? இந்த

நோக்கத்துடன், இக்கதைகள், எழுதப்பட்டிருக்கின்றன என்று அக் காலத்தி லிருந்த திராவிடர்களுக்குத் தெரிந்தால், ஆரியர்கள் கதி என்னவாகி இருக்கும்? நிர்மூலப்படுத்தி இருக்கமாட்டார் களா? எனவே, காலத்தையும், ஊரையும், பேரையும் மாற்றி, தங்களுக்குள் 'குழூக்குறி' போல வைத்துக்கொண்டு, மற்றவர்க ளுக்கு பைத்தியக்காரக் கதையாகவும், ஆரியர்களைப்பற்றிய கதை யாகவும்; தோன்ற வேண்டுமென்றே, கதைகளில் வரும், நரகா சுரன் போன்ற எதிரிகளை எல்லாம், ஆரியர்களுக்குப் பிறந்தவர்க ளாக எழுதிக்கொண்டு வந்தார்கள்.

நாளடைவில் ஆரியர்கள் ஆதிக்கம் ஏற்பட்டு, ஆரிய திராவிடப் பகைமை உணர்ச்சி மாறி, ஆரியர்களுடைய மதத்தை யும், திராவிடர் தலையில் ஏற்றிய பிறகு, ஆரியர்களுக்கு, ஆதியில் நல்வாழ்வு ஏற்படுத்துவதற்கு முக்கிய கருவியாகப்பயன் பட்ட கட்டுக்கதைகளை எல்லாம் புராணங்களென்றும் புண்ணியக் கதைகளென்றும் பெயர் கொடுத்து, திராவிட மன்னர்களை எல்லாம் அநியாயமாகப் படுகொலை புரிந்த விஷ்ணுபோன்ற கிராதகர்களை எல்லாம் கடவுளாகமாற்றி, அவர்கள் பன்றித் தோல் சிங்கத்தோல் ஆகிய மிருகத்தோல்களை மூடி, அந்தந்த மிருகம்போல வேடமிட்டுச் சென்று, விரோதிகளை மாய்த்த, பாதகச் செயல்களை எல்லாம், அந்தக் கடவுளின் அவதாரங்கள் என்று ஏற்றி, ஆரியர்கள் இன்றும் நன்றியுடன் கொண்டாடி வருகிறார்கள். இது மட்டுமா?

திராவிட இனத்தாரை இழிவு செய்து வீழ்த்திய கதை களை, திராவிடர்களே போற்றிப் பூசிக்கும்படி செய்ததுடன், அந்தப் புராணங்களையே திராவிடர்களின் பணப்பெட்டிக்கும் அறிவுப் பெட்டிக்கும் இணைத்த, ஒரே பேரிங்க் பம்பு வாகவும் மாட்டிவிட்டனர். பகுத்தறிவுக்கு ஒத்துவராத முறையில் இந்தக் கதைகள் இருக்கின்றனவே, என்ன காரணம்? என்று யாராவது கேட்டால், அது, முற்றுங்கடந்த முனிபுங்கவர்களால் ஆக்கப் பட்டது, அதில், முள் முனை அளவு கூட நாம் குறை கூறுவது முறையாகாது, ரௌரவாதிநரகம் சித்திக்குமென்று பயமுறுத்தி, மழுப்பி பக்குவமாக அறிவுக்கு விலங்கு பூட்டி விடுகிறார்கள்.

இத் தகைய புராணங்கள் ஆதியில் எழுதப்பட்டவை. 4 லக்ஷத்து 8 ஆயிரம் கிரந்தங்களைக் கொண்ட 118 உட்பிரிவுகளையுடைய 18 புராணங்களே யாகும். அவற்றின் உட்பிரிவுகளை ஆரியர்கள் சங்கிதை என்று கூறுவர். இவைகள், வியாசன் காலத்தில் தான் சைவ வைணவ மதக் கோட்பாடுகளுக்கு ஏற்ற விதத்தில் மிக விளக்கமாகத் தெளியுபடுத்தப்பட்டதாம். ஆரியர்களின் ஆட்சியும் செல்வாக்கும் ஓரளவு நிலைபெற்ற காலமும் வியாசன் காலமேயாகும். எனவே, சைவ வைணவ மதப் பிரிவுகளை, ஆரியர்கள் ஏற்படுத்தியதும் இதே காலத்தில்தான் என்று அறியலாம்.

திராவிடர்களுடைய இல்லற முறை நாகரீகத்தை ஆரியர்கள் கற்றுக்கொண்டு, ஓரளவு நடைமுறையில் கொண்டுவந்த காலமும், வியாசனுடைய காலமேயாகும்.

இக்காலத்தில் நிகழ்ந்த பாரத யுத்தமும், ஆரிய திராவிட நாகரீக முரண்பாட்டின் அடிப்படையில் எழுந்த போராட்டமேயாகும். எப்படி எனில், பாண்டுவின் மனைவியாகிய குந்திதேவி என்பவள், ஆரிய நாகரீகப்படி, எமன், இந்திரன் முதலான பல பேரைச் சேர்ந்து, பாண்டவர்களைப் பெற்ற காரணத்தினால்; பாண்டவர்களை, அண்ணன் தம்பி என்று ஒப்புக்கொள்ளவும், பங்கு பாகம், கொடுக்கவும், திராவிட நாகரீகத்தில் சிறந்திருந்த திரியோதனன், மறுத்துவிட்டான். அதுவே, பெரும் போராட்டத்தை விளைத்ததென்பதை, யாராலும் மறுக்க முடியாது. இன்னும், பகதத்தன் முதலான பல அரக்கர்கள், திரியோதனன் படையில் சேர்ந்து பாரதப் போரில் ஈடுபட்டதாகக் கூறப்படுவதும், திரியோதனனுக்குத் திராவிடர்களுடைய உறவு, மிகுதியாக இருந்ததையே காட்டுகிறது. வியாசன் காலத்தில்தான், ஆரியர்கள், திராவிட இனத்தாரை வடநாட்டில் இருந்து அடியோடு தொலைக்கக் கருதி சாமபேதம், தான தண்டம், என்கிற நான்கு உபாயங்களைத், தீவிரமாக கையாண்டனர் என்றும் சொல்லலாம். அக்காலத்தில், வடக்கே இமயம் வரை, திராவிடர்கள், சிறு சிறு கூட்டமாகச் சிதறிக்கிடந்தார்கள் என்று தெரிகிறது. இருந்தாலும், இப்போது போல, அக் காலத்தில் திராவிடர்கள், வடநாட்டில் ஒழிக்கப்பட்டுப் போகவில்லை. ஆனால்,

R34
N147

திராவிடர்களை ஒழிப்பதற்கு தீவிரமான பல சூழ்ச்சிகள் கையாளப்பட்டுவந்தன. அவைகளில், ஆரிய திராவிடக் கலப்பு மணங்கள் சில நடந்தேறியது குறிப்பிடத்தக்கனவாகும். கிருஷ்ணன் மகன் அநிருத்தன் என்பவன், பாணாசுரன் மகள் உஷை என்பவளை, மணந்ததும்; பாண்டியன் மகளும், பப்பிரவாகனுடைய தாயுமான, சித்திராங்கதை என்பவளை, அருச்சுனன் மணந்ததும்; கடோற்கசனின் தாய், இடும்பி என்பவளை, வீமன் மணந்ததும். கலப்பு மணம் நிகழ்ந்ததற்குச் சான்றாகும், இந்தக் கலப்பு மணங்களினால் இரண்டு இனங்களும் கலந்துவிடவில்லை. இந்தக் கலப்பு மணங்களை ஆரியர்கள் ஒப்புக்கொண்ட நோக்கம், திராவிட மன்னர்களில் சிறந்தவர்களை யெல்லாம், திராவிட இன உணர்ச்சி அற்றவர்களாகச் செய்வதற்கேயாகும். இவ்வாறு, திராவிட மன்னர்களில் வலிமை வாய்ந்தவர்களை எல்லாம் மடக்கிவிட்டு, மற்றத் திராவிடர்களை, எப்போதும் போலக் கொடுமைப்படுத்தியே வந்தார்கள். எனவே, இக் காலத்தில், ஆங்கிலோ இந்தியர்கள் இருப்பதைப் போல, அக் காலத்தில், ஆரியத் திராவிட இனம் என்று, ஒன்றும் உண்டாகவில்லை. காரணம், ஆரியர்களின் கொடுமையைப் பொறுக்க முடியாத, திராவிடர்கள் முதலில் விந்தியமலைக்குத் தெற்கில் குடியேறத் தொடங்கவே; இனம், இனத்தோடு என்றாற்போல எல்லாரும் கொஞ்சம் கொஞ்சமாகத் தெற்கில் குடியேறி விட்டனர். மீதமிருந்த சில, திராவிடமன்னர்களை வடநாட்டில் வாழ வொட்டாமல் கொன்று விட்டனர்.

112139

சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்ல வேண்டுமானால், வட நாட்டில், ஆரியர்கள் அரசுரிமையும் ஆதிக்கமும் பெற்றுச் சிறப்படைந்த போது, அரக்கர்கள், அசுரர்கள் என்கிற, திராவிடர்களை வேட்டையாடிக் கொல்வதைப் போல, கண்ட கண்ட இடங்களில் கொன்றொழித்து வந்தார்கள் என்னலாம். இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் இடும்பாசுரன், பகாசுரன், சடாசுரன் முதலியவர்கள் குறிப்பிடத் தக்கவர்களாவார்கள்.

இவ்வளவு நெருக்கடிமிகுந்த காலத்தில்தான், நரகாசுரன் சற்று பலங்கொண்ட அரசனாக படை பலம், கோட்டை, அரண்மனை, முதலிய வசதிகளுடன், அரசாண்டு வந்தான் என்று தெரி

கிறது. அக் காலத்தில், நரகாசுரன் போன்ற திராவிட மன்னர்களின் பலமான ஆதிக்கம் வட நாட்டில் வேறொன்றும் இல்லை என்றே கூறலாம்.

அதாவது, வட நாட்டில் இருந்த திராவிட ஆட்சிகளில், கடைசி ஆட்சி நரகாசுரனுடைய ஆட்சி என்பதை, நாம் நன்கு உணரவேண்டும். இதுவரை கூறிவந்த விவரங்களில் இருந்து நரகாசுரனை ஒரு திராவிட மன்னன் என்று உணர்ந்து கொள்ளலாம்.

திராவிடப் பூண்டுகளை வட நாட்டிலிருந்து அடியோடு தொலைக்க வேண்டுமானால், ஆரியர்கள் அரசாங்கம், அச்சமற்றதாக இருக்க வேண்டுமானால், வேத வேள்விகளின் பெயரால், கொன்று தின்று குடித்து வெறித்து நிம்மதியாகக் கூத்தாட வேண்டுமானால், நரகாசுரன் ஒழிந்தால்தான் முடியும் என்பதை, ஒவ்வொரு ஆரியனும் உணர்ந்திருந்த காலம்தான் நரகாசுரனுடைய ஆட்சிக் காலம் என்று, நாம் ஒருவாறு யூகித் துணர முடியும். எப்படி எனில்;- 1008 அண்டங்களையும் ஆண்டவன் என்கிற சூரபத்மன் கொல்லப்பட்டபோதும் தீபாவளி ஏற்படவில்லை. சுவர்க்க மத்திய பாதாளம் வரை அரசு செலுத்தியவன் என்கிற, இராவணன் இறந்தபோதும் தீபாவளி ஏற்படவில்லை. திரிபுராதிகளை ஒழித்த போதும் தீபாவளி இல்லை. இரண்யன் இரண்யாக்ஷன் இறந்த போதும் தீபாவளி இல்லை, தேவருலகத்தில் திக் விஜயம் செய்து தேவேந்திரனை விரட்டிய சம்பராசுரனை சாகடித்த போதும் தீபாவளி இல்லை. காலகேய நிவாத கவசர்களை வீழ்த்தியபோதும், தீபாவளி இல்லை. இவர்களைப்போலவே பகிடாசுரன், இடும்பாசுரன், பகாசுரன், சடாசுரன், கர்த்தபாசுரன், கயமுகாசுரன், தாரகாசுரன் முதலான கணக்கில்லாத திராவிடர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களுக் கெல்லாம் தீபாவளி ஏற்படவில்லை. காரணம் என்ன? இவர்கள் எல்லாரையும் விட நரகாசுரன் கொடியவனுமல்ல என்பதை இன்னோரிடத்தில் சொல்லி இருக்கிறோம். அப்படி இருக்க ஏன் இவன் இறந்ததற்காகக் கொண்டாட வேண்டும்? சத்தியபாமை வரத்திற்காகவா? இல்லவே இல்லை; அது ஒரு கட்டுக்கதை. சத்தியபாமை வரம், இந் நாட்டிலுள்ள சில தற்குறிகளுக்கு மட்டும்

தானு பலிக்கும்? உலகமென்பது இங்குள்ள இந்துக்களிருக்கும் இடம் மட்டும் தானு? வெறும் பித்தலாட்டம். பகதத்தன் முதலான திராவிடர்களுக்கு மனம் வேதனைப் படாமல் இருப்ப தற்குச் சொன்ன, வஞ்சக மொழி. உண்மை அது வல்ல. உண்மை என்னவென்ருல், நரகாசுரன் ஒழிந்ததோடு வட நாட்டில் திராவிட ஆதிக்கமும் ஒழிந்து விடுகிறது. அதிலிருந்து, ஆரியர்கள் அச்ச மின்றி ஆட்சி செய்ய அடிகோலிய நாள். நீண்ட நாளாக காடுகளில் இருந்து, ஒளித்து ஒளிந்து, கள்ளும் புலையாட்டும், அனுபவித்த நிலைமை நீங்கி, இனி, வீடுகளில், வீதி களில், அரண்மனைகளில், உத்தியான வனங்களில் எல்லாமிருந்து குடித்து விட்டுக் கும்மாளம் போடக், கொடிக் கட்டிய நாள். "ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்தியது" போல மத்திய ஆசியாவிலிருந்து ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு அநாகரீகர்களாகப் பிழைக்க வந்த ஒரு சிறு கூட்டம், அனுதி காலம் தொட்டு அச்ச மின்றி அரசாண்டு வந்த வீரப் பெரு மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கருவறுத்துக் கடைசியில் குடி விரட்டி விட்டுக் கொண்டாடும் குதூகல நாள். எனவே அந்த நாளை ஆரியம் சத்தியபாமையின் வரம் என்று சப்பைக் கட்டுக் கட்டி விட்டு வெற்றிக் கொண்டாட்டம் கொண் டாடுகிறது.

இதுவரையும் நரகாசுரன் யார் என்பதை ஆராய்ந் துணர்ந்தோம். இனி நரகாசுரன் என்ருல் என்ன? அவனுக்கு அந்தப் பெயர் சூட்டியது யார் என்பதைக் காண்போம்.

நரகாசுரன் என்ருல் என்ன?

நரகாசுரன் என்னும் சொல், நரக – அசுரன் என்கிற இரண்டு சொற்களை ஒன்றுபடுத்திய தொகை மொழியாகும். இம் மொழி விரியும் போது, நரகத்தை அடையும் அசுரன் என் ருவது, நரக வேதனை தரும் அசுரன் என்ருவது, விரியும். நரகம் என்ருல், துன்பம் நிறைந்த இடமென்றும்; அசுரன் என்ருல், ஆரியப் பகைவன் என்றும், அர்த்தமாகும். அசுரன் என்பதற்கு சுராபானம் செய்யாதவன், ஆரியக்கோட்பாடுகளை ஒப்புக்கொள் ளாதவன் என்று பல விதமான பொருள் சொல்லப்படுகிறது.

என்றாலும், ஆரியப் பகைவன் என்பதே செம்பொருள் ஆகும் என்பதோடு, மற்ற அர்த்தங்களையும் அடக்கிக்கொண்டிருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நாம் யாரை நரகாசுரன் என்று குறிப்பிடுகிறோமோ, அவனுடைய உண்மையான பெயர், இதுவாக இருக்கமுடியாது. பெயரைச் சொல்லும் போதே கேட்பவர்களுக்கு ஒருவித அருவெறுப்பும் இழிவும் எண்ணத்தில் உதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், ஆரியப் புலவர்கள் இழிவான பெயராகத் தேர்ந்தெடுத்துச் சூட்டி இருக்கிறார்கள்.

நரகாசுரனுடைய தாய்தந்தையர்களே, இந்தப்பெயரைச் சூட்டியிருக்கக் கூடாதா? என்ற எண்ணம் சிலருக்குத் தோன்றலாம். ஒருக்காலும் அப்படிப் பெயர் சூட்டி இருக்கமுடியாது. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்பதை நாம் கவனத்தில் வைக்கவேண்டும். பாமர மக்களுங்கூடத் தங்கள் மக்களுக்குச் சிறந்த பெயரிட்டு அழைக்கத்தான் ஆசைப்படுவார்கள். அரச குடும்பத்தில் குழந்தைகள் பிறந்தால் சொல்லவா வேண்டும்? நரகாசுரன் அரச குடும்பத்தில் பிறந்தானோ, சாதாரண குடும்பத்தில் பிறந்தானோ அது நமக்குத் தெரியாது என்றாலும், அவன் ஓர் அரசன் என்பதை எவரும் அசைத்துப் பேசமுடியாது. அரசனாக இருப்பவன் முட்டாளாக இருந்தாலும் கூட அவனுக்கு அறிவுரை கூறவும், ஆலோசனை கூறவும், அவனுடைய அவைக்களத்தில் அமைச்சர்கள் இருப்பர். பல நூல் ஆராய்ந்த பண்டிதர்கள் பக்கத்தில் இருப்பர். அந்த அறிஞர்கள் அரசனுடைய பெயர் இழிவான பொருளுடையதாக இருந்தால், அதனால் ஏற்படும் இழுக்கை எடுத்துக்காட்டி அழகான பெயர் ஒன்றைச் சூட்டிக்கொள்ளும்படி ஆலோசனை கூறாமல் நமக்கென்ன என்று இருக்கமாட்டார்கள்.

எனவே, நரகாசுரனுக்குச் சூட்டப்பட்ட இந்தப் பெயர் ஆரியப் புலவர்கள் சூட்டிய புனை பெயரேயாகும். ஆரியப் புலவர்கள் அவர்களுடைய பகைவர்களைப்பற்றி எழுதும் கட்டுக் கதைகளில் உண்மையான பெயரை வெளியிடுவது வழக்கமில்லை என்றும் அவ்வாறு மறைக்கவேண்டிய அவசிய மிருந்ததென்றும்

முன்பு கூறி இருக்கிறோம். இருந்தாலும், சில அசுரர்களுக்கு ஆரியப் புலவர்கள் சூட்டியுள்ள புனை பெயர்கள் மிக மிக இழிவானதாகவும், ஆரியப்புலவர்களின் குரோதப் புத்திக்கு எடுத்துக் காட்டாகவும் இருக்கின்றன. உதாரணமாக, துர்க்கையால் கொலை செய்யப்பட்ட மகிஷாசுரனை எடுத்துக் கொள்வோம். மகிஷம் என்றால் எருமை என்றும், அசுரன் என்றால் ஆரியப் பகைவன் என்றும், பொருளாகிறது. இத்தகைய இழிவான பெயரைச் சூட்டியது மட்டுமல்ல. மகிடாசுரன் என்பவன் எருமை மாட்டு முகத்தை யுடையவனென்றும், அவன் தலையில் இரண்டு எருமைக் கொம்புகளும் கூட, முளைத்திருந்தன என்றும், அவன் தன்னுடைய உணவுக்கு வேண்டிய மச்ச மாமிஷங்களுக்காகத் தேவர்களைத் தினந்தோறும் மீன் பிடித்துக்கொண்டு வரச் சொல்லியும், வேட்டையாடிக் கொண்டு வரச் சொல்லியும் கொடுமைப் படுத்தினான் என்று, கதையும் கட்டிவிட்டிருக்கின்றனர்.

எருமை மாடு புல் தின்னக்கூடியதும், மேல் தாடையில் பல் இல்லாததும், உண்ட இரையை மீண்டும் வாய்க்குக் கொண்டுவந்து, அசைபோட்டுச் செறிக்கக்கூடியதும், மாமிஷம் தின்னவே முடியாத வாயையும், ஜீரணப் பையையுமுடைய பிராணியாயிற்றே, அதனுடைய முகத்தையுடைய மகிஷாசுரன் மாமிஷம் சாப்பிடுவதெப்படி? அவன் எதற்காகத் தேவர்களை வேட்டையாடச் சொல்லப் போகிறான்? என்கிற சாதாரணப் பகுத்தறிவுகூட இல்லாமல், கதை கட்டி இருக்கிறார்கள். ஆரியப் புலவர்கள், அவர்களுடைய பகைவன்மீது பழியும் இழிவும் சுமத்துகிற ஒரே எண்ணத்தில் அறிவையும் இழந்து விட்டார்கள் என்று கருதுகிறோம்.

இதைப்போலவே, ஆரியப் பகைவர்களான இராவணன் கும்பகர்ணன், கர்த்தபாசுரன், பகாசுரன் ஆகிய எல்லாருடைய பெயர்களும் ஒவ்வொரு விதத்தில் இழிவான பெயர்களேயாகும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், புராணங்களில் வரும் அசுரர், அரக்கர், இராக்ஷதர், சூரர் என்கிற ஆரியப் பகைவர்கள் எல்லாருக்குமே உண்மையான பெயர்களை சூட்டவில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய பலமான ஆதாரங்களைக் கொண்டு தான் திராவிடத்தந்தை பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் புராணங்களில் வரும் அசுரர், அரக்கர் என்கிற ஆரியப் பகைவர்கள் அனைவரும் இந்நாட்டுப் பூர்வ குடிகளாகிய திராவிடர்கள்தான் என்று உறுதியாகச் சொல்கிறார்.

இதுவரை நரகாசுரன் என்றால் என்ன? என்று ஆராய்ந்தோம். இனி நரகாசுரன் எதற்காகக் கொல்லப்பட்டான்? அவன் செய்த கொடுமைகள் என்ன! அவன் கொல்லப்பட வேண்டிய அளவு கொடியவன்தானா என்பதை ஆராய்வோம்.

நரகாசுரன் குற்றங்கள்.

நரகாசுரன் ஆரியர்களுக்கு என்ன கொடுமை செய்தான்? எதற்காக ஆரியர்கள் அவனைக் குரூரமாகக் கொலைசெய்தார்கள்? என்று ஆராய்ந்தால், வேறுவேறு புராணங்களில்வரும்வேறுவேறு அசுரர்களைப் போல, நரகாசுரன் கொடுமை செய்தவன் என்று சொல்லமுடியாது. அதற்குப் புராணங்களிற்கூட ஆதாரமில்லை. கந்தபுராணத்தில் வரும் சூரபத்மன் முதலான அசுரர்கள், தேவர்களைச் சிறையில் அடைத்தும், ஏவல் வேலை செய்யப் பணித்தும், கொடுமை படுத்தினார்கள், என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அவை உண்மையா? பொய்யா? என்கின்ற விசாரணைகளை கந்த புராண ஆராய்ச்சியாளர்களுக்கு விட்டு விடுவோம்.

நரகாசுரனை எடுத்துக்கொண்டால், சூரபதுமன் முதலான வேறு அசுரர்களைப் போல தேவர்களையோ ஆரியர்களையோ கொடுமைப்படுத்தினான்; என்று கூற முடியாது. அவன் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்கள், அதிதியின் காதணியைக் கவர்ந்தது ஒன்று, வருணன் குடையைக்கவர்ந்தது மற்றொன்று. இந்த இரண்டு குற்றங்களும் ஊர்ஜிதம் செய்யத்தக்கவையாகும். இவை தவிர, இந்திரனுடைய மணிகூடபர்வதத்தையோ அல்லது சிம்மாசனத்தையோ கவர்ந்து கொண்டதாகச் சொல்லப்படுவது எல்லாப் புராணங்களிலும் காணப்படாததால் அக் கூற்றை உறுதியாக எடுத்துக்கொள்ள முடியாது. அப்படியே மூன்று குற்றங்களையும் நரகாசுரன் செய்தான் என்றே வைத்துக்கொண்

டாலும் கூட, அதற்காக நரகாசுரனைப் படுகொலை செய்ததுதான் சரி என்று, அறிவுடைய எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இதை, இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு மற்றோரிடத்தில் ஆராய்வோம். இப்போது நரகாசுரனைக் கொன்றதற்காக சுமத்தப்பட்டிருக்கும் மூன்று குற்றங்களும் எவ்வளவு தூரம் உண்மையுடையன என்பவை பற்றி ஆராய்வோம்.

அதிதியின் குண்டலம்.

நரகாசுரனால், காதணியைக் கவரப்பட்ட, அதிதி என்பவள், ஓர் ஆரியப் பெண். தக்ஷன் என்பவனுக்கு மகள். காசிப ரிஷி என்கிற ஆரியனுடைய பதின்மூன்று மனைவியரில், இவளே முதல் மனைவியாவாள். இவளே, மாபலி என்பவனிடம் மூன்றடி மண்ணைப் பிச்சை கேட்டு, அவன் உயிரையே மோசம் செய்த, வாமனன் என்கிற மகாவிஷ்ணு அவதாரத்தைப் பெற்றவள். இவள் காதில் இருந்த குண்டலங்களைத்தான் நரகாசுரன் கவர்ந்து கொண்டான் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. எதற்காகக் குண்டலங்களைக் கவர்ந்து கொண்டான், என்ற காரணங்கள் புராணங்களிற் காணப்படவில்லை. எதிரிகளின் நல்ல எண்ணங்களையும், கொள்கைகளையும், எடுத்துப் பேசுகின்ற வழக்கம் இந்த உலகத்திலேயே கிடையாதே! நரகாசுரனுடைய நல்லெண்ணங்களையும், நற் செயல்களையும், ஆரியர்கள் எங்ஙனம் எழுதி வைப்பர்? எனவே, நாம் இங்கு உண்மையை ஆராய்ந்து உணர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நரகாசுரன் எதற்காக அதிதியின் குண்டலங்களைக் கவர வேண்டும்? அவன் யார்? வயிற்றுப் பிழைப்புக்காக வழிப்பறி செய்யும் திருடனா? அல்லது நள்ளிரவில் கன்னமிட்டு உறக்கத்தைச் சோதித்து உள்ளதை சுருட்டும் கீழ்மகனா? இத்தகைய ஈன எண்ணம் கொண்ட கீழ் மகன் என்று எதிரிகள் கூடச் சொல்லவில்லை. அவன் பிராக்ஜோதிஷபுரியின் அரசன். வேற்றரசர் தலை வணங்க வெற்றிக் கொடி நாட்டி அரசாண்ட வீர மன்னன் அவன். ஏன் அரை வராகனிடை மதிப்புள்ள அதிதியின் குண்டலங்களைக் கவர வேண்டும்? இந்த இடத்தில்தான் ஆரியப் புலவர்கள் நரகாசுரன் வரலாற்றில் இருட்டடிப்புச் செய்

திருக்கிறார்கள். இந்தக் கட்டத்தில், அதிதியின் குண்டலங்களை நரகாசுரன் பறிப்பதற்குரிய காரணத்தைச் சொன்னால், ஆரியத்தின் வண்டவாளம் வெளிவந்து விடும் என்பதை, ஆரியப் புலவர்கள் நன்குணர்ந்துதான், இருட்டடிப்புச் செய்திருக்கிறார்கள். எப்படி எனில்;-

ஆரியர்களில், கல்வியறிவும் சூழ்ச்சித்திறமும் உடைய இரக்கமற்ற சோம்பேறிகளைத்தான், ரிஷிகள் என்றும், தபசிகள் என்றும், கொண்டாடுகிறார்கள். நாம் இப்படிக் கூறுவது, கல்வியறிவற்ற வைதீகர்களுக்கும், ஆராய்ச்சியற்ற புராணப் பண்டிதர்களுக்கும், நூதனமாகத்தோன்றலாம். அது, அவர்களுடைய அறியாமையேயன்றி வேறில்லை. உண்மையில் ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்தில், நல்ல பாண்டித்திய முடையவர்களையே, ஆரியர்கள் ரிஷிகள் என்று கொண்டாடினார்கள் என்பதற்கு;-

“ நாருஷி : குருதே காவ்யம்
நாவிஷ்ணு : ப்ருதிவீபதீ
நாதேவாம் சோ ததாத் யந்நம்
நாருத்ர : க்ரம பாடக : ”

என்ற, ஆரியச் சுருதியின் சுலோகமே போதுமான சான்றாகும். இதன் பொருள் என்னவெனில்;

“ ரிஷி அம்சமில்லாதவனுக்கு காவியம் எழுதும் தன்மையும், விஷ்ணு அம்சமில்லாதவனுக்கு உலகாளுந் தன்மையும், தேவர் அம்சமில்லாதவனுக்கு அன்னதானம் செய்யும் தன்மையும், ருத்திரன் அம்சமில்லாதவர்களுக்கு முறையாக வேதம் ஓதும் தன்மையும், உண்டாகாது” என்பதேயாகும். எனவே, ரிஷிகள் என்றால், சமஸ்கிருத மொழியை நன்றாகப் படித்தவர்கள் என்பதை, எவரும் மறுக்கமுடியாது. நாம் இந்த ஆராய்ச்சியின் ஆதியில் இருந்து “ஆரியப் புலவர்கள்” என்று குறிப்பிடுவது இந்த ரிஷிகளைத்தான் என்பதைக் கவனத்தில் வைக்க வேண்டுகிறோம். தமிழ்ப்புலவர்களான, கம்பன், சேக்கிழார், முதலானவர்களும், அவர்களுக்கு வேண்டியவர்களை, வாழ்த்திப்பாடினால் வாழ்வார்களென்றும், வேண்டாதவர்களை வைது பாடினால் வீழ்

வார்களென்றும், மக்களை நம்பச்செய்து மிரட்டிக்கொண்டிருந்ததும், ஆரியர்களின் மூடக் கொள்கைகளைத் தமிழ் நாட்டில் பரப்பிய பின்னர்தான், என்பதை நாம் உணர்ந்துகொண்டால் "நாருஷி: குருதே காவ்யம்" என்ற சுருதிப்படி தமிழ்ப் புலவர்களும், தங்களை தமிழ் ரிஷிகளாகக் கருதிக் கொண்டிருந்தார்கள் என்பது புலனாகும்.

இதுகாறும்; நாம் கூறிவந்த ஆதாரங்களால் 'ரிஷிகள்' என்கிற ஆரியமொழிக்கு நேராகத் தமிழில் பெயர்த்துச் சொல்ல வேண்டுமானால் 'ஆரியப் புலவர்கள்' என்பதே சரியான மொழி பெயர்ப்பு என்று கொள்ள வேண்டியதைத் தவிர, மறுப்பதற்கொன்றும் ஆதாரமில்லை.

இந்த ஆரியப்புலவர்கள் தான், அவர்களுடைய கூட்டங்களை, இட்டது சட்டமாக அடக்கி ஆண்டு, அட்டகாசம் செய்து வந்தார்கள் என்பதும். இவர்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை சொல்வதுங்கூட, கொடியபாவச் செயல் என்று, ஆரியர்கள் கருதிக்கொண்டிருந்தார்கள் என்பதும், ஆரியக்கதைகளைத் துருவி ஆராய்பவர்கள் நன்கறிவார்கள். ரிஷிகளுக்கு இவ்வளவு செல்வாக்குக் கொடுத்த காரணத்தினால் தான், இவர்கள் சூழ்ச்சிக்காரர்களாகவும், சோம்பேறிகளாகவும், இருந்து கொண்டு, மிகுந்த அட்டகாசம் செய்தார்கள் என்பதை, ஒவ்வொரு ஆரியக்கதைகளிலும் காணலாம். புராணப் பொய் மூட்டைகளின் சிருஷ்டி கர்த்தாக்களும், இவர்கள் தான் என்பதை, நாம் இங்கு எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. எந்தக்கதையை எடுத்துக்கொண்டாலும், அதில் பெரும் பகுதி ரிஷிகளின் திருவிளையாடல்களாக இருப்பதே, இவர்களுடைய ஆதிக்கமும், செல்வாக்கும், ஆரியக் கூட்டத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது என்பதற்குப் போதிய சான்றாகும்.

இந்த ரிஷிகள் என்கிற ஆரியப் புலவர்களின் தொழில் என்னவென்றால், அழகுடைய இளம் பெண்கள் எங்காவது இருந்தால், அவள் அரசன் மகளாக இருந்தாலும் சரியே, அவளை அவள் பெற்றோர்களிடம் யாசகமாகக் கேட்டு வாங்கி மனைவி

யாக்கிக் கொள்வார்கள். இந்த ரிஷிகளுக்கு அஞ்சித்தான் பாஞ்சாலன், ஜனகன், நக்னசித்து, முதலிய அழகான பெண்களைப்பெற்ற அரசர்கள், மச்சயந்திரம் அறுத்தல், வில் வளைத்தல், மாடுகளை மடக்கல், என்கிற, ரிஷிகளால் செய்ய முடியாத — பலசாலிகளால் செய்யக் கூடிய நிபந்தனைகளை ஏற்படுத்தி விளம்பரப்படுத்தினார்கள், என்றால் மிகையாகாது.

என்னெனில்; மகுடந்தரித்த மன்னர்களாக இருந்தாலும், ரிஷிகளின் மனதைத் திருப்தி செய்யாவிட்டால், ரிஷிகளுக்குக் கோபம் பிறந்து, சாபம் போட்டு விடுவார்கள், என்கிற 'பூச்சாண்டி'ப் பயம், ஆரிய மன்னர்களின் நெஞ்சத்தில், ஆழமாகப் பதிந்து போயிருந்தது, ஆகவே, மகளைக் கேட்டாலும் சரி, மனைவியைக் கேட்டாலும் சரி, ரிஷிகளின் மனங் கோணமல் நடந்தால் போதும் என்று, மறுக்காமல் கொடுத்தனுப்பி விடுவார்கள்.

செலவுக்குப் பணம் வேண்டுமானாலும், இந்த ரிஷிகளுக்கு எங்கும் வேண்டிய மட்டும் கிடைக்கும். ரிஷிகளின் நடத்தை அறிவு, குணம், ஆகியவற்றை நன்றாகவும் ஆதாரத்துடனும் தெரிந்து கொள்ள வேண்டுமானல், அரிச்சந்திர புராணம் ஒன்றே போதுமானதாகும்.

இவ்வாறாக, மண், பெண், பொன், பொருள், எது வேண்டுமானாலும் இலவசமாகப் பெற்றுக் கொண்டு, யாகம், தவம் முதலியன செய்வதற்கு வசதியான இடம் என்று காரணம் சொல்லிக்கொண்டு, பெரிய நகரங்களை அடுத்திருக்கும் காடுகளில், பர்ணசாலை என்கிற இலைகளால் வேய்ந்த குடிசைகளைக் கட்டிக்கொண்டு, சீடர்கள் என்கிற பெயரால், பல, தடிப் பிரமச்சாரிகளை ஏவலாட்களாக வைத்துக்கொண்டு, அவரவர்கள் விருப்பத்திற்கும், உடற் கொழுப்புக்கும், தகுந்தபடி, பல மனைவியரையும் வைத்துக்கொண்டு, யாகமென்கிற பெயரால் ஆடு மாடுகளைக் கொன்றும், சுட்டுத்தின்றும், சோம பானம் என்கிற ஒரு வகைக் கள்ளைக் குடித்தும், வெறியாட்டம் ஆடிக் கொண்டு திரிவதுதான், இந்த ரிஷிகளுக்கு நித்திய தொழிலாகும். இந்தக் கயவர்களின் கும்பலில் ஒருவன்தான், காசிபமுனிவன் என்பதை நாம் கவனத்தில் வைக்க வேண்டும்.

இத்தகைய காசிபமுனிவன், எப்போதாவது குடும்பத்துடன் பிராக்ஜோதிஷபுரத்திற்கு அருகில் குடியேறி இருக்க வேண்டும். அங்கேயும் வழக்கம்போல, நாம் முன்பு கூறிய முறைப்படி யாகம், தவம் என்கிற பெயரால், பஞ்ச பாதகச் செயல்களைச் செய்திருக்க வேண்டும். இதைக் கேள்விப்பட்ட நரகாசுரன், ஆரிய வெறியாட்டங்களைப் பார்த்துக்கொண்டிருக்க மனம் சகியாமல், காசிபன் குடும்பக் கும்பலைத், தன் நாட்டு எல்லையைவிட்டுத் துரத்தி இருக்கவேண்டும். அப்போது அதிதி என்பவளின் காதணிகள், எப்படியோ நரகாசுரனிடம் அகப்பட்டிருக்க வேண்டும். இப்படித்தான் அதிதியின் குண்டலங்கள் கவரப்பட்டிருக்க வேண்டுமேயன்றி, வேறு எந்த விதமான பழியையும், நரகாசுரன் மீது சுமத்துவதற்குக் காரணமில்லை. புராணங்களில் கருவியும் இல்லை. இவ்வாறு அதிதியின் குண்டலங்கள் அபகரிக்கப்பட்டன, என்பதை, ஆரியப் புலவர்கள், புராணங்களில் விளக்கி இருந்தால், அதோடு கூடவே, காசிப முனிவர்களின் வண்டவாளத்தையும், வெளியிடவேண்டும் அல்லவா? எனவே, புராணத்தில் காரணம் கூறுமல் விட்டு விட்டனர்.

இவ்விடத்தில், இன்னெரு முரண்பாட்டையும் விளக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. என்னவெனில், ஆதியில் மாயை என்னும் அசுரப் பெண்ணைச் சேர்ந்து, சூரபத்மன், சிங்கமுகன், என்கிற அசுரர்களைப் பெற்றவனும், தன்னுடைய இரண்டாவது மனைவி, திதி என்பவளிடம், இரண்யன், இரண்யாக்ஷன், என்கிற அசுரப் பிள்ளைகளைப் பெற்றவனும், வாமன அவதாரத்தைப் பெற்றவனும், பரசுராமனுல் கொல்லப்பட்டுப் போன, அரச குடும்பங்களில் இருந்த, 21 தலைமுறைக் கைம்பெண்களையும் சேர்ந்து; அரசகுடும்பத்துக்குச் சந்ததியுண்டாக்கியவனும், இந்தக் காசிபன் என்றே சொல்லப்படுகிறது. அப்படியானல்; இந்தக் காசிபனுக்கு வயது என்ன? எத்தனை மன்வாந்தரங்களாக, இவன் இருந்து வருகிறுன். இவன் சேர்க்கையினுலேயே, கைம்பெண்கள் எல்லாம் சந்ததி விர்த்தி செய்கிறுர்கள் என்றுல், இவன் யோக்கியதையை நாம் எப்படி மதிப்பிடுவது? இவனே ஒரு பெண்ணிடம், கடவுளையும், ஒரு பெண்ணிடம், அசுரரையும், ஒரு பெண்ணிடம் அரசர்களையும், பெறுகிறுன்

என்றால், இது எவ்வளவு பெரிய அண்டப்புரட்டு, என்றெல்லாம் நமக்குச் சிந்தனை உண்டாகிறது. ஒரு புராணத்தில், இவனைப் பற்றிச் சொல்லும்போது, உலகத்தில் உள்ள தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள், மரங்கள், பாம்புகள், புல் பூண்டுகள், கழுகுகள், காகங்கள், சுருக்கமாகச் சொன்னால், நாம் கண்ணால் காணும்பொருட்கள் அத்தனையும் காணமுடியாத அசுரர்–தேவர் என்கிற கற்பனைப் பொருட்கள் அத்தனையும், காசிபனுக்கு அவனுடைய மனைவியரிடத்துப் பிறந்தனவாகவே கூறப்படுகின்றன. இதற்கெல்லாம், தகுந்த காரணம், விவரம், ஆகியவைகளைப் புராணப் பண்டிதர்களிடம் கேட்டுத்தான், தெரிந்து கொள்ள வேண்டும். இவைகளை ஆராய, இந்தச் சிறு ஏடு இடந்தராது. எனவே, இனி, நரகாசுரன் வருணன் குடையை எடுத்துக் கொண்ட வரலாற்றை ஆராய்வோம்.

வருணன் குடை.

வருணன் என்றால் யார்? அவன் எங்கிருப்பவன்? என்பதை, நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஆரியர்களும், ஆரியப் புலவர்களும், தீயை; அக்கினி பகவானென்றும், காற்றை; வாய்வு பகவானென்றும், தண்ணீரை; வருண பகவானென்றும்; கற்பனை செய்துகொண்டு, வணக்கம் வழிபாடு செய்வது வழக்கம். வருணன் என்றால், தேவன் என்றோ, மனிதன் என்றோ, ரிஷி என்றோ கூறமுடியாது. ஆடு மாடுகளைப்போல ஒரு பிராணியுமல்ல. அது ஒரு சடப் பொருள். சடப் பொருள் என்றால், உயிரில்லாத வஸ்து என்று அர்த்தம்.

இந்த, வஸ்துவாகிய தண்ணீரைத்தான், வருணபகவான் என்று, பாவனை செய்து கொண்டு, ஆரியர்கள், இன்னும் வழிபாடு செய்து வருகிறார்கள் என்பதை, நாம் நன்குணரவேண்டும்.

தண்ணீரினுடைய குடையைத்தான், நரகாசுரன் பிடுங்கிக் கொண்டான் என்று பழி சுமத்தப்பட்டிருக்கிறது. தண்ணீருக்குக் குடை எதற்காக? மழையில் நனைந்து விடாமல் வைத்துக் கொண்டிருந்ததா? அல்லது, வெயிலில் காய்ந்து விடாமல் வைத்துக் கொண்டிருந்ததா? அது, பட்டுக் குடையா? சாதாரணத் துணிக் குடையா? அல்லது, இந்தக் காலத்தில்,

வீட்டுக்கு வீடு கிடக்கும், மான் மார்க், சூரியன் மார்க், குடையைப் போன்றதா? அந்தக் குடையின் அகலம் நீளம் என்ன? தண்ணீரென்றால், உலகமெங்கும் இருக்கிற, கடல்கள், கண்மாய்கள், குளம், குட்டை, கிணறுகளெல்லாம் நிரம்பி, பல பிரிவாகக் கிடக்கும் பொருளாயிற்றே? அதற்குக் குடை பிடிப்பதென்றால், அந்தக் குடை, உலகத்தையே மூடத்தக்க அளவுள்ள, பெரிய குடையாக அல்லவா இருக்க வேண்டும்? என்பன போன்ற கேள்விகளுக்குப் புராணீகர்களும்; ஆரியர்களும்தான், விளக்கம் கூறவேண்டும்.

அப்படியானால், குடையே இல்லையா? நரகாசுரன், வருணன் குடையைப் பிடுங்கிக்கொண்டான் என்று, புராணங்கள் கூறுகின்றனவே, ஒரு காரணமும் இல்லாமல் ஆரியப் புலவர்கள் இப்படிக் கதை கட்டுவார்களா? என்ன காரணத்தால், குடையைப் பிடுங்கியதாகக் கதை கட்டினார்கள், என்ற கேள்வி உண்டாகுமல்லவா? அப்படிக் கேட்பவர்களுக்கு நாம் விளக்கங் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆ(ம்); ஆரியர்கள், குடை என்று எதைக் குறிப்பிடுகிறார்கள் என்றால், ஆற்றங்கரை, குளத்தங்கரைகளில் ஆரிய ரிஷிகள், தபோதனர்கள், என்பவர்கள் வருணபூசை என்கிற, தண்ணீர் வழிபாடு செய்யும் போது, பூரண கும்பங்கள், என்கிற, தண்ணீர்க் குடங்களை அமைத்து, அதை, வருணனாகப் பாவித்து, அதற்கு, சிறுபிள்ளைகள் செய்கின்ற விளையாட்டுக் குடைபோல, புல்லாலும் இலையாலும் மலராலும், செய்யப்பட்ட குடையொன்றை பூரண கும்பத்துக்குப் பின்னால், கட்டிவைப்பார்கள். அதைத்தான், வருணன் குடை என்று சொல்வது வழக்கம். அந்தக் குடையை அபகரித்துக் கொண்டான் என்றுதான், நரகாசுரன் மீது, ஆரியப் புலவர்கள், பழி சுமத்தி இருக்கிறார்கள். அந்த ஆபாசப் பொருளை, என் நரகாசுரன் அபகரிக்க வேண்டும்? என்று கேட்கலாம். ஆம்; அதை அவன் அபகரித்திருக்க மாட்டான். அதை அபகரிப்பதால், ஆறு மாத ஆட்டுக் குட்டியின், அரை வயிற்றைக் கூட நிரப்ப முடியாது என்பதை, அவன் அறிந்தே இருப்பான். ஆனால், அத்தகைய வருண பூசையை, ஆரிய ரிஷிகள் நடத்திக் கொண்டிருந்தபோது, அர்த்தமில்லாத அந்தச் செயலைக் கண்டு

மனம்பொருத நரகாசுரன், அங்குள்ள பூரணகும்பங்களை அகற்றி அதற்கு நட்டி இருந்த குடையையும் பிடுங்கி எறிந்திருப்பான். அத்தோடு, அவனுடைய எல்லைக்குள் அத்தகைய சடங்குகள் எதுவும் செய்யக்கூடாதென்றும், ஆணையிட்டிருப்பான். அவன் ஏன், இப்படி எல்லாம் செய்யவேண்டுமென்றால்; அவன், எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல கடவுள் ஒன்றை நினைத்து வழிபடும் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். அத்தன்மை வாய்ந்த அவனுக்கு ஆரிய ரிஷிகள் செய்யும் அர்த்தமற்ற சடங்குகளும், கல், மண், தண்ணீர், நெருப்புமுதலானசடப்பொருள் வழிபாடும், அருவெறுப்பை மூட்டி இருக்கலாம். ஆரியர்கள் செய்யும் அர்த்தமற்ற ஆபாசச் செயல்களில், ஏதாவது உண்மை இருக்குமோ என்று, தன்னுடைய நாட்டு மக்கள் அதனைப் பின்பற்றுதிருக்கக் கருதியும் இவ்வாறு செய்திருக்கலாம். இதைத்தவிர, உண்மையில் வருணன் என்பவனையோ, அவனுடைய குடையையோ, நரகாசுரன் எடுத்துக்கொண்டான் என்று கருதுவதற்கு, யாதொரு ஆதாரமுமில்லை. ஆரியர்களின் நீண்ட நாள் வழக்கமே கண்ட கண்ட பொருட்களை கடவுளாக உருவகப்படுத்தி வணங்குவது தான் என்பதற்கு, இன்னும் வட நாட்டில் இருப்பவர்கள், இந்தியா என்கிற இவ்வுப கண்டத்தை, "பாரதமாதா" என்கிற பெண்ணாக உருவகப்படுத்திக்கொண்டு, முஸ்லீம்கள், பாரத மாதாவின் தோளையும் மார்பையும் வெட்டவேண்டுமென்கிறார்கள். இது நீதியா? முறையா? என்றெல்லாம் ஓலமிட்டுத் திரிந்ததே போதுமான சான்றாகும். நரகாசுரனிடம் குடையைப் பறிகொடுத்த வருணனும், இப்போது முஸ்லீகளுக்குத் தோளையும் மார்பையும் பறிகொடுத்த பாரதமாதாவும், பாட்டன் பேத்தி முறையாகவோ, அண்ணன் தங்கை முறையாகவோ தான், இருக்கவேண்டும். அதுபோலவே நரகாசுரன், வருணன் குடையை எடுத்துக்கொண்டான் என்று புராணம் எழுதிய ஆரியப் புலவர்களும், இப்போது, பாரதமாதாவின் தோளையும், மார்பையும், முஸ்லீம்கள் வெட்டுகிறார்கள் என்று, மூச்சுத்திணறக் கூச்சலிட்ட வட நாட்டுத் தேசீய ஆரியர்களும், பாட்டன் பேரனாகவோ அண்ணன் தம்பியாகவோதான் இருக்கவேண்டும் என்பதை, எவரும் மறுக்க முடியாது.

நாம் இதுகாறும் கூறிவந்ததில் இருந்து, நரகாசுரனைப் படுகொலை புரிந்த ஆரியர்கள், அவனைக்கொலை செய்வதற்குத் தகுந்த காரணம் ஒன்றும் இல்லாமல், இருந்ததாலும், மண்ணாசையும், இனவேற்றுமையும் கொண்டு, திராவிட மன்னர்களை மாய்த்துவிட்ட செய்தியை, இருட்டடிப்புச் செய்யவேண்டிய அவசிய மிருந்ததாலும், வருணனிடம் குடையைப் பிடுங்கிக் கொண்டான் என்பதுபோன்ற கற்பனைப் பழிகளைச் சுமத்தினர்கள் என்பது அசைக்க முடியாத உண்மையாகும்.

ஆரியப் புலவர்கள், அவர்களுடைய விரோதிகளாகிய அசுரர்களைக் களவாடினார்கள் என்றோ, வழிப்பறி செய்தார்கள் என்றோ, குற்றம் சாட்ட முடியாத அளவுக்கு, அசுரர்கள் நன்னடக்கையும், நீதியும், நாகரீகமும் உடையவர்களாக இருந்தார்கள் என்று உறுதியாகக் கூறலாம். எப்படி எனில், அசுரர்கள் என்கிற திராவிடர்கள் மீது, ஆரியர்கள் சொல்கின்ற குற்றச் சாட்டுகள் எல்லாம் தேவர்களைச் சிறையிட்டான், தேவர்களை ஏவலாட்களாக வைத்துக்கொண்டான், என்பன போன்ற கற்பனைக்குற்றச்சாட்டுகளேயாகும். இந்தத்தேவர்கள் எல்லாருமே, இப்போது தோளும் மார்பும் போயிருக்கின்ற பாரதமாதாவின் சொந்தக்காரர்கள் தான் என்பதில் சந்தேகமே கிடையாது. உதாரணமாக மகிடாசுரன் கதையை எடுத்துக்கொள்வோம் அவனை, மிகமிகக் கொடியவனாக அருணாசல புராணத்தில் காட்டப் பட்டிருக்கிறது. அவன் கொடியவன் என்பதற்கு என்ன காரணம் சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

மகிடாசுரன் என்பவன் அக்கினி பகவானை சமையல் செய்யும்படி கட்டளையிட்டிருந்தானாம். வாய்வு பகவானைத் தன்னுடைய கொலு மண்டபத்தில், விசிறி வீச வைத்திருந்தானாம். வருண பகவானை வாசல் தெளிக்க ஏற்பாடு செய்தானாம். இத்தகைய காரியங்களை எல்லாம் அவன் தேவர்களைச் செய்யச் சொன்னதால் கொடிய பாவிதானாம். அதனால்தான் தேவர்கள் தூண்டுதலின் மேல் துர்க்கை என்பவள் கொன்று விட்டாளாம்.

இவ்வளவு தான் மகிடாசுரன் கொல்லப் பட்டதற்குக் காரணம், என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் எவ்வளவு

அற்புதமாகப் பழி சுமத்தி இருக்கிறார்கள் என்று ஆராய்ந்தால் நன்கறியலாம். எப்படி எனில்,

வருணன், வாயு, அக்கினி என்கிற இந்தப் பகவான்கள். மகிடாசுரன் பிறக்கு முன்பிருந்தே வாசல் தெளித்தல், விசிறி வீசல், சமையல் செய்தல் ஆகிய வேலைகளைத்தான் செய்தார்கள். மகிடாசுரன் காலத்திலும், அந்த வேலைகளைத்தான் செய்தார்கள். ஆனால், அந்தக் காலங்களில் இவர்களுக்கு இருந்த ஓய்வு நேரங்களையும் மரியாதைகளையும் ஞாபகப்படுத்திக் கொண்டு இந்தக் காலத்தில்; அதாவது வெள்ளைக்காரர்கள் நாட்டில், விஞ்ஞான ஆராய்ச்சி வளர்ந்து, யந்திர சாதனங்கள் பெருகியபின்பு, இவர்களைப் படுத்தும் பாட்டையும் அவமானத்தையும் கண்டால், அந்தக் கால ஆரியப் புலவர்கள் தற்கொலை செய்து கொள்வார்கள் என்றே நம்புகிறோம்.

அந்தக் காலத்திலாவது அக்கினி, வாய்வு, வருணன் என்கிற பகவான்களை, மகிடாசுரன் போன்ற, சில, அசுரர்கள் கொடுமைப் படுத்தினார்கள். இந்தக் காலத்திலோ, இந்நாட்டு வைதீக ஆரியனிலிருந்து, இங்கிலாந்து முதலிய வெளிநாட்டு மிலேச்சர்கள்வரை, ஏன் உலகம் பூராவுமே, இரவுபகலாகக் கணக்கின்றிக் கொடுமை செய்கிறார்கள். எப்படி எனில்;-

மனிதரைச் சுமக்கும் பஸ்ஸில் இருந்து, மலம் சுமக்கும் லாரி வரை, எல்லா வண்டிச் சக்கரங்களிலும், மூச்சு விடக்கூட இடமில்லாமல், வாய்வு பகவானை அடைத்துக் கொடுமை செய்கிறார்கள். இரயில்வே என்சின்களிலும், கப்பல் என்சின்களிலும், வருணபகவானையும் அக்கினிபகவானையும் அடைத்து, இருவரையும், மனிதனில் இருந்து, கழுதை, நாய், பன்றி, கல், மண் முதலிய எல்லாப் பொருட்களையும் ஏற்றி, இழுக்கும்படி சவாரி செய்கிறார்கள். இவை மட்டுமா? அந்தோ; சென்னை, மதுரை முதலிய நகரங்களில், பாதாளச் சாக்கடைகள் ஏற்பட்ட பிறகு, வருண பகவானையே மலம் சுமக்கப் போட்டு விட்டார்கள். தேவர்களையும், பகவான்களையும் இவ்வளவு கேவலமாக நடத்தும் இந்தக் காலத்து மக்களுக்கு, இதுவரை யாதொரு கெடுதலும் உண்டாக இல்லை. இரயில், மோட்டார், கப்பல் சொந்தக்காரர்

களைத் தொலைப்பதற்கு; மகாவிஷ்ணுவோ, மற்றவர்களோ, ஒரு கழுதையாக - நாயாகக்கூட அவதாரமெடுத்து வரவில்லை. இனி மேலாவது எடுப்பார்கள் என்பதற்கு அறிகுறியும் தெரியவில்லை. இப்போதுள்ள மனிதர்களை விட, பன்மடங்கு குறைந்த கொடுமைகளைச் செய்தவனாக இருந்தும், தர்க்கையால் கொல்லப்பட்டிருக்கிறான் மகிடாசுரன். அவனைவிடப் பல்லாயிர மடங்கு குறைந்த கொடுமையைச் செய்தவனாக இருந்தும், கொல்லப்பட்டிருக்கிறான் நரகாசுரன். இப்போதுள்ள கொடியவர்களுக்கு, என்ன நேரிடும் என்பதைப் பற்றிப் புராணப் பண்டிதர்கள் விளக்குவார்கள் என்று நம்புகிறோம்.

மணிகூட பர்வதம்.

நரகாசுரன், இந்திரனுடைய மணிகூட பர்வதத்தையோ, சிம்மாசனத்தையோ, கவர்ந்துகொண்டான், என்பதைப்பற்றி எல்லாப் புராணங்களும் ஒருமுகமாகச் சொல்லாததுடன், இரண்டொன்றில், சிம்மாசனத்தை எடுத்துக் கொண்டான் என்றும், இரண்டொன்றில் மணிகூட பர்வதத்தை எடுத்துக்கொண்டான் என்றும் சொல்கின்றன. சிலவற்றில், இவைகளைப்பற்றி ஒன்றுமே சொல்லாமலும் விடப்பட்டிருக்கின்றன. இக் காரணத்தினால் தான், இதை உறுதியில்லாத குற்றச்சாட்டு என்று முன்பு கூறினோம். உண்மையாக நடந்த சேதியாக இருந்தால் தானே, ஒன்று போலக் கூற முடியும்? இப்போதும், பொய் சாட்சி சொல்லக் கோர்ட்டுக்கு வருபவர்களைக் காண்கின்றோமல்லவா? வக்கீல்கள் கற்றுக் கொடுத்ததை, அரை குறையாக உளறிக் கொட்டி, அவமானப் படுத்துவதையும், அதைச் சரிப்படுத்துவதற்கு, வக்கீல்கள் வரிந்து கட்டிக் கொண்டு நிற்பதையும், நீதிபதி இந்த நிலைமையைக் கண்டு, உண்மை யுணர்ந்து தீர்ப்புச் செய்வதும், நித்தியம் நடந்து கொண்டு தானே இருக்கிறது. அதைப் போலவே, புராணங்கள் ஒன்றோடொன்று, முரண்பாடாகக் கூறும் கூற்றுகளெல்லாம், முழுப் புரட்டென்று நாமும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்திர சிம்மாசனம், அல்லது மணிகூட பர்வதம் கவர்ந்தான் என்பது, முழுப் பொய் என்று மட்டும் கூறியே இதை முடித்திருக்கலாம். ஆனால், புராணப் பண்டிதர்களுக்கு, மனம் ஆறுதல் அடையாது என்பதற்காகவே

இதையும் புராணங்களிற் கண்டபடி ஒப்புக்கொண்டு, மறுக்க முன் வந்திருக்கிறோம். எனவே, முதலில் இந்திரன் என்றால் யார் என்பதை ஆராய்வோம்.

புராணப் பண்டிதர்களிடம், இந்திரன் யார் என்று கேட்டால், அவர்கள், இப்படித் தான் சொல்வார்கள். வானுலகத்திலே, முப்பத்து முக்கோடி தேவர்களும், 60 ஆயிரம் அரம்பையர்களும், 48 ஆயிரம் ரிஷிகளும், சங்கநிதி, பதுமநிதி, அயிராவதம், உச்சைசிரவம், கற்பகவிருக்ஷம், காமதேனு, ஆகிய சம்ப்ரமத்தோடும், இரவு பகல் இல்லாமலும், கண்களை இமைக்காமலும், எந்நேரமும் போகபோக்கியத்தை விரும்பியபடி அனுபவித்துக்கொண்டிருப்பவனே, தேவேந்திரன் என்று விளக்குவார்கள். புராணங்களும் அப்படித்தான் கூறுகின்றன. ஆனால், உண்மை அதுவல்ல. உண்மை என்னவென்றால்; நாம் முன்பு கூறியது போல வருணன் வாய்வு அக்கினி ஆகிய பகவான்களுடைய அண்ணன் தான் தேவேந்திரனும். தற்கால முறையில் சொல்ல வேண்டுமானால் பாரதமாதாவின் புருஷன் என்று சொல்லலாம். எப்படி எனில்;

பூமியில் பயிர்கள் செழித்தால்தான் உயிர்க் குலங்கள் வாழமுடியும். பயிர்கள் செழிக்கவேண்டுமானால் மழை பெய்து தீர வேண்டும். மழை பெய்ய வேண்டுமானால் அதற்கு மழை மேகங்கள் வேண்டும். அந்த மழை மேகங்களுக்கும் எஜமானனாக இருப்பவன் தான் இந்திரன் என்று ஆரியப் புலவர்கள் கற்பனை செய்திருக்கிறார்கள். மழை, இடி, மின்னல், ஆகிய இயற்கை நிகழ்ச்சிகள் எல்லாம் இந்திரன் என்பவனுடைய அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்கின்றனவாம். பூமியில் மழை பெய்ய வேண்டுமானால், இந்திரனுடைய தயவினால் தான் முடியுமாம். அதற்காகவே ஆரியர்கள், இந்திரன் என்கிற இந்தக் கடவுளையும், எங்காவது ஒரு மலையடிவாரத்தில் இந்திர விழா என்கிற இந்திர பூசை ஏற்படுத்தி, முன்பு வருண பூசைக்குச் சொன்ன முறைப்படியே, ஒரு ஆசனத்தின் மீது, பூரண கும்பம் என்கிற தண்ணீர்க் குடத்தை வைத்து, மாலை முதலியன அணிந்து, மாடுகளை வெட்டிப், பலி கொடுத்து, கள்ளைக் குடம் குடமாகப் படைத்துப் பூசை செய்து, பின்பு,

வெட்டுண்ட மாடுகளைச் சமைத்துத் தின்று விட்டுக், கள்ளையும் ஆளுக்குக் கொஞ்சமாக, ஆணும் பெண்ணும் குடித்து விட்டு, வெறியாட்டமும், காம கேளிக்கையும், நடத்துவார்கள் என்று, இந்திரவிழாவின் அலங்கோலங்களைப் புராணங்கள் கூறுகின்றன. இவ்விதமாக ஒவ்வொரு ஆண்டும் செய்துகொண்டிருந்தால்தான் இந்திரனுக்குச் சந்தோஷ முண்டாகி, காலந் தப்பாமல் மழை பெய்ய ஏற்பாடு செய்வானாம். இத்தகைய திருவிழாக்களை ஆரியர்கள் தொடர்பு ஏற்பட்ட பின்னால், தமிழ் நாட்டிலும் நடத்தியதாகத் தெரிகிறது. தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் காலத்தில், அகஸ்தியன் என்கிற, ஆரியன் கேட்டுக் கொண்டபடி, இந்திர விழா ஆரம்பிக்கப்பட்டதாகவும், சோழர் பரம்பரை யுள்ள மட்டுப், இந்த, அறிவற்ற ஆபாசத் திருவிழா, தொடர்ந்து நடை பெற்றதாகவும், சில நூல்களிற் காணப்படு கின்றன.

இனி, மணிகூட பர்வதம் என்றால் என்ன? இந்திர சிம் மாசனம் என்றால் என்ன? என்பவைகளைத் தெரிந்து கொண்ட பிறகு அவைகளை நரகாசுரன் கைப் பற்றிய காரணங்களையும் கூறுவோம்.

மணிகூட பர்வதம் என்பது, ஓர் செயற்கைக் குன்றென் றும், அந்தக் குன்று, நரகாசுரனுக்கே சொந்தமானதென்றும், நரகாசுரனே அந்தக்குன்றை செய்வித்தவனென்றும் தெரிகிறது. அதாவது, அரச குடும்பத்தினர்கள், வேனிற் காலங்களில், மாலை நேரத்தில் உல்லாசமாகச்சென்று, காற்று வாங்குவதற்கென்றே உத்தியான வனங்களுக்குச் சமீபமாகச் செயற்கைக் குன்றுகளை ஏற்படுத்துவது வழக்கம். செயற்கைக் குன்று என்றால், கல்லா லும், மண்ணாலும், சுண்ணாம்பாலும, கட்டப்படும் சிறிய மலை யாகும். இத்தகைய செய்குன்று ஒன்றை நரகாசுரன் கட்டுவித் திருந்தானென்றும், அந்தக்குன்றில் துவஷ்டாவின்மகள் கசேரு என்பவளைச் சிறை வைத்திருந்தானென்றும் சொல்லப்படுகிறது. இந்தச் செய்குன்றின் அடிவாரத்தை ஆரியர்கள் இந்திர விழா நடத்துவதற்குத் தகுந்த இடமாகத் தேர்ந் தெடுத்து, அந்தக் குன்றுக்கு இந்திர மணிகூட பர்வதம் என்று பெயரிட்டிருக்க

வேண்டும். இரண்டொரு தடவை அவ்விடத்தில் இந்திர விழா நடத்தப்பட்டும் இருக்கலாம்.

இதையறிந்த நரகாசுரன், அந்தக் குன்றில் இந்திர விழா நடத்தக் கூடாதென்று தடுத்து அங்கு ஆரியர் நுழையாதபடி காவலும் வைத்திருக்கலாம். இந்த உண்மையையே, திரித்து: நரகாசுரன், இந்திரனுடைய மணிகூட பர்வதத்தை எடுத்துக் கொண்டான், என்று கதை கட்டி இருக்க வேண்டும்.

இனி, இந்திர சிம்மாசனம் என்பதை என்னவென்று பார்ப்போம்.

இந்திர சிம்மாசனம் என்றால் இந்திர விழாவின்போது அமைக்கப்படும் பூரணகும்பம் என்கிற தண்ணீர்க் குடத்தை ஏற்றி வைக்கும் பீடமேயாகும். தண்ணீர்க் குடத்தை இந்திரனாகக் கற்பனைசெய்து கொள்ளும் ஆரியர்கள், அதை ஏற்றி வைத்திருக்கும் பீடத்தைச் சிம்மாசனம் என்பதில் அதிசயமில்லையல்லவா? இவ்விதமாகக் கற்பனைச் சிம்மாசனத்தில், கற்பனை இந்திரன் இருந்துகொண்டு, உயிருள்ள உண்மையான மனிதர்களைப் பைத்தியக்காரர்களாக்கி அடிமைப் படுத்துவதையும், உயிருள்ள ஆடு மாடுகளை இரக்கமின்றிக் கொன்று தின்பதையும், அறிவுடைய ஒரு அரசன், பார்த்துக்கொண்டு சும்மாயிருப்பானா? அதுவும் அன்னியர்கள் வந்து அலங்கோலம் செய்வதைச் சகித்துக் கொண்டிருப்பானா? எனவே இந்திரனைச் சின்னபின்னப் படுத்திவிட்டு, இந்திர சிம்மாசனத்தையும் பக்கத்திலிருக்கிற, வங்காளக் கடலில் வீசி விட்டிருக்கிறான் நரகாசுரன். இந்தச் செயலைத் தடுக்கவும் முடியாமல், பொறுக்கவும் முடியாமல், பொங்கிக் கொண்டிருந்த ஆரியர்கள், தங்கள் தலைவனான கிருஷ்ணனை வரவழைத்து, நரகாசுரனை, வஞ்சனையாகக் கொல்லச் செய்திருக்கிறார்கள். இதைத்தவிர. இந்திரன் என்று எவனாவது வானுலகத்தில் இருப்பானாயின், அவன், இந்த உலகத்திலிருக்கிற, ஆரியர்களுடன் மட்டும், தொடர்பு வைத்துக் கொண்டு, நரகாசுரன் போன்றவர்களிடம், அடிபட்டு, அவமானப்பட்டு, சிம்மாசனம் முதலியவற்றைப் பறிகொடுத்து விட்டு, வெட்கம் இல்லாமல், தன்னை, இந்திரன் என்று சொல்லிக் கொண்டிருப்பதை விட,

பேசாமல் இந்திர பதவியை விட்டு விட்டு, எங்காவது, கண் காணாத தேசங்களுக்குப்போய், பிச்சை எடுத்துப் பிழைப்பது, எவ்வளவோ கண்ணியமான பிழைப்பு, என்று, போய்விடுவான்.

ஏனென்றால், எந்தப் புராணத்தை எடுத்துக் கொண்டாலும், அதில் சொல்லப்படுகிற அசுரர்கள், அரக்கர்கள், என்கிறவர்கள் எல்லாருமே, இந்திரன், வருணன், அக்கினி, வாய்வு, ஆகிய இவர்களைத்தான், யாரையாவது தொல்லைப் படுத்தியதாகத் தெரிகிறது. அதிலும், இந்திரன் என்றால், எல்லா அசுரர்களுக்கும் "ஸ்பெஷல் காபி" போல, சுவையாக இருப்பான் போலும். இந்திரனை அடிக்காத — அவமானப் படுத்தாத அசுரர் கிடையாது என்றே சொல்லவேண்டும். இந்திரனுக்கு ஏன் இத்தனை கஷ்டம்? அவன் அமரர் உலகத்தில் அரசனுமே! மழை, இடி, மின்னல் முதலிய நிகழ்ச்சிகளை எல்லாம், அவன் ஆதிக்கத்துக்கு உட்பட்டதாமே! அப்படியானால், அவைகளைக் கொண்டே அசுரர்களை, வாட்டி வதைத்திருக்கலாமே? ஒவ்வொரு அசுரன் வீட்டிலும், ஒவ்வொரு இடி விழுந்தால், அசுரர்கள் கதி அதோகதியாகிவிடாதா? ஏன் அவ்வாறு செய்யவில்லை? இந்தக் கேள்விகளுக் கெல்லாம் புராணப் பண்டிதர்கள் தான் பதில் சொல்ல வேண்டும். இது நிற்க.

இவ்விடத்தில் நாம் இன்னும் சில உண்மைகளைத்தெரிந்து கொள்ள வேண்டும். என்னவென்றால், ஆரியர்கள் புராணங்களில் வருகிற கடவுளர்களில், சில கடவுளர்கள் தான் இவ்வாறு கற்பனை என்றும், மற்றக் கடவுளர்கள் அப்படி இல்லை என்றும் நினைத்துவிடக்கூடாது. ஆரியக் கடவுளர்களான, சிவன், விஷ்ணு பிரம்மா என்கிற மும்மூர்த்திகளும் அவர்களுடைய பரிவாரங்களான இந்திரன் முதலான முப்பத்துமுக்கோடி தேவர்களும், அரம்பையர்களும், அஷ்டதிக்குப்பாலகர்களும், அஷ்டவைரவர்களும், சப்தமாதர்களும், காளி, கூளி, முதலான தேவதைகளும் ஆகிய எல்லாமே ஒவ்வொரு காரணங்களைத் தெய்வங்களாக உருவகப்படுத்தப் பட்டவைகள் தான். இவைகளை விரிவாகக் கூறுவதென்றால், அது ஒரு பெரிய புராணமாகவே முடியும். எனவே இவற்றை இத்துடன் நிறுத்திக்கொண்டு, நரகாசுரனைக்

கொன்றொழித்த கிருஷ்ணன் என்பவனையும், அவனுடைய அவதாரப் புரட்டையும் இனி ஆராய்வோம்.

கிருஷ்ணவதாரம்.

கிருஷ்ணன் யார் என்று புராணப் பண்டிதர்களைக் கேட்டால், அவன் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்று சொல்வார்கள். அதைக் கேட்டுக் கொண்டு பாமரர்களும், கிளிப்பிள்ளை போலச் சொல்வார்கள், கிருஷ்ணன் மட்டும் என்ன; இராமன், சுப்பிரமணியன் என்கிற புராண இதிகாசக் கடவுள்கள் எல்லாருமே, இந்த நாட்டு மக்கள் நெஞ்சத்தில் மிக ஆழமாகப் பதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு, இந்தக் கருத்துக்குப் பொருந்தாத கடவுள்கள், எப்படி இவ்வளவு தூரம் விளம்பரப் படுத்தப்பட்டார்கள், என்று ஆராய்ந்தோமானால், மனிதன் அனுபவிக்கும் இன்பங்களில் கதை இன்பமும் ஒன்று, கவர்ச்சி மிகுந்த கட்டுக் கதைகள் (Novels) கட்டுக்கதைகள் என்றே அறிந்திருந்தும்கூட, நமது உள்ளத்தைக் கதைகளில் வரும் பாத்திரங்களின் இன்ப துன்பங்களோடு இணைத்து, அந்தப் பாத்திரங்களில், யாரை நல்லவராகக்காட்டப்பட்டிருக்கிறதோ, அவர்கள் மீது அனுதாபமும், யாரைத் தீயவராகக் காட்டப்பட்டிருக்கிறதோ, அவர்கள்மீது வெறுப்பும் உண்டாக்கி வைத்து விடுகின்றன அல்லவா? தேர்ந்த எழுத்தாளர்கள், விரும்பினால், நல்லவனைக் கெட்டவனாகவும், கெட்டவனை நல்லவனாகவும் காட்டிவிட முடியும். அது போலவே சிறந்த கதைகளுக்கும் அற்புத சக்தி உண்டு.

தினந்தோறும் ஆயிரக் கணக்கான கட்டுக் கதைகள் வெளிவந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், நாம் கதையின் போக்கில் சிந்தையைப் பறிகொடுத்து விடுகிறோமென்றால், கதைகளே காண முடியாத அந்தக் காலத்தில், கதை இன்பம் கண்ட மக்களுக்கு ஒரு பைத்தியம்தானே ஏற்படும்! எனவே, ஆரியப் புலவர்கள் நீண்ட இனிய கதைகளை எழுதி, மக்களைக் கேட்கும் படி செய்து, மனதைக் கவர்ந்து, கதையோடு கதையாக கயவர்களைக் கடவுள்களாகவும், மேன்மக்களைக் கீழ் மக்களாகவும், எழுத்துத் திறமையால் கற்பனைசெய்து, கேட்டவர்கள் உள்ளத்தில் நிலைக்கச்செய்து விட்டார்கள் என்று தெரிந்துகொள்ளலாம்.

அந்தக் காலத்தில் கதை என்னும் கலப்பை கொண்டு மக்கள் நெஞ்சத்தில் உழுது விதைத்த நஞ்சுப்பயிர் இன்னும் அழியாமல் விருத்தியாகிக் கொண்டிருக்கிறது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால்; கதை இன்பம் என்கிற சர்க்கரைப்பாகில், கடவுள் அவதாரம் என்கிற போதையைக் கலந்து கொடுத்து, மக்களைப் பழக்கப் படுத்தி, தினமும் அந்தப் போதையை விரும்பச் செய்து விட்டார்கள். கள், கஞ்சா, அபின், முதலிய போதையை உட்கொண்டு பழகியவர்கள், அதனால் ஏற்படும் தீமையை உணராமல், போதையை விரும்பிக்கொள்வது போலவே, கதை இன்பத்துடன் சேர்த்து அனுபவித்துப் பழகிய கடவுள் போதை எவ்வளவு ஆபாசமாக இருந்தாலும், எத்தனை கெடுதலாக இருந்தாலும், அந்தப் பழக்கத்தைக் கைவிட மறுக்கிறார்கள்.

அவ்வாறு விளம்பரப் படுத்தப்பட்ட அவதாரங்களில் கிருஷ்ணனும் ஒருவன். இவனுடைய கதையைப் பூராவும் சொல்லி, அதற்கு மேல் ஆராய்ச்சியும் செய்வதென்றால், எளிதில் முடியாத காரியம். அது அவசியமும் இல்லை. விவரமாக அந்தக் கதையை அறிய விரும்புபவர்கள் பாரதம், பாகவதம் இரண்டையும் படித்துத் தெரிந்துகொள்வார்களாக. இப்போது கிருஷ்ணனுடைய குணம், நடத்தை, யோக்கியம், அறிவு ஆகியவைகளைத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு, அவன் கதையை மூலைக்கு ஒன்றாகச் சொல்லி முடித்துக்கொள்வோம்.

ஆரிய அரச குடும்பத்தைச் சேர்ந்த வசுதேவன் என்பவனுக்கும் தேவகி என்பவளுக்கும் 8-வது குழந்தையாகக் கறுப்பு நிறத்துடன் ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு கர்கிய முனிவன் என்பவன், கிருஷ்ணன் என்று பெயர் சூட்டினான். கிருஷ்ணன் என்கிற சமஸ்கிருத மொழிக்குத் தமிழில் கறுப்பன் என்று அர்த்தம். இந்தக் கறுப்பனைத்தான் மகா விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்லப்படுகிறது.

கிருஷ்ணனுடைய தாயாகிய தேவகியின் கூடப் பிறந்த கம்சன் என்பவன், தேவகியின் 8-வது குழந்தையைக் கொன்று

விட எண்ணி இருந்தானும். காரணம், தேவகியின் 8-வது குழந்தை தன்னைக் கொன்று விடுமென்று, முன்பே; அறிந்திருந்தானும். எனவே, கிருஷ்ணனைக் கம்சன் கொன்றுவிடுவான் என்று பயந்து, அவனுடைய பெற்றோர்கள் ஆலோசனைசெய்து, கோகுலம் என்கிற ஆயர்பாடியில் இருக்கின்ற, நந்தகோபன் என்கிற இடையன் வீட்டில், அவன் மனைவி யசோதை என்பவளிடம், கிருஷ்ணனைக் கொண்டுபோய்ச் சேர்த்து, வளர்க்கும்படி விட்டு விட்டார்கள். இவ்வாறு கிருஷ்ணன் நந்தகோபன் வீட்டில் வளர்வதைக் கேள்விப்பட்ட கம்சன், அவனைக் கொன்று விட்டு வரும்படி ஒருவர் பின் ஒருவராகப் பலரை அனுப்பினன். அத்தனை பேரையும் கிருஷ்ணனே கொன்று விட்டான். கம்சனுடைய முயற்சிகள் ஒன்றுமே பலிக்காமலே போய் விட்டது. இதற்கிடையில், கிருஷ்ணன் இடையர் வீட்டில் இருந்த தயிர், பால், வெண்ணெய், முதலியவைகளைத் திருடித் தின்று, பெரியவனுகி விட்டான். நந்தகோபனுடைய ஆடு மாடுகளை மேய்ப்பது இவன் தொழில். புல்லாங்குழல் வாசிப்பதில் மிகத் திறமையுள்ளவன். சிறு வயதிலிருந்தே, சூழ்ச்சிக்காரனுகவும், துஷ்டனுகவும், திருடனுகவும், கொலை செய்பவனுகவும், காமுகனுகவும் இருந்தான். இவனுடைய, வளர்ப்புத் தந்தையாகிய நந்தகோபன் கூடப் பிறந்தவளும், இவனுக்கு அத்தை முறையுமான, இராதை என்பவளைக்; காதலியாக வைத்துக் கொண்டான்.

இவனல் கொல்லப் பட்டவர்களும், கொல்விக்கப் பட்டவர்களும், கணக்கில்லாதவர்கள். உதாரணமாக, பூதனை, சகடாசுரன், திருணவர்த்தன், வற்சாசுரன், பகாசுரன், அகாசுரன், காளியன், சங்கசூடன், அரிஷ்டன், கேசி, வியோமாசுரன், கம்சன் வீட்டு வண்ணன், ஒரு யானைப் பாகன், சாணூரன், சுபலன், தோசலன், கம்சன், ஆகிய இத்தனை பேரையும், இவன் இளம் பருவத்திலேயே கொன்றுவிட்டான். கம்சனைக் கொன்ற பிறகு; கம்சனுடைய தகப்பன் உக்ரசேனனுக்கு முடிசூட்டி, அவனுதரவில் இவனும் இருந்தான். பிறகு, பஞ்சசன், சததன்வா, நரகாசுரன், பௌண்டரன், சுதக்ஷணன், ஒரு பூதம், சாளுவன், சராசந்தன், சிசுபாலன் ஆகியவர்களைப் பற்பல சமயத்தில் பற்பல காரணங்களால் தொலைத்து விட்டான்.

இவனுடைய மனைவிமார்களுக்கு கணக்கே இல்லை.

அத்தையாகிய	இராதையம்மாள்	1
	ருக்மணியம்மாள்	1
	சாம்பவதியம்மாள்	1
	காளிந்தியம்மாள்	1
	மித்திரவிந்தையம்மாள்	1
	சத்தியவதியம்மாள்	1
	பத்திரையம்மாள்	1
	இலக்ஷ்மணையம்மாள்	1
	நப்பின்னையம்மாள்	1
	ஆக	9

ஆகிய ஒன்பது மனைவியர்களுக்குப் பெயர் காணப்படுகிறது. இவர்கள் தவிர, நரகாசுரன் பட்டினமாகிய, நாகன்தீபவூரைக் கொள்ளை யடித்த போது, அங்கிருந்து பதினாயிரம் பெண்களைச் சிறை பிடித்துக் கொண்டு வந்து, மனைவியாக்கிக் கொண்டான். நரகாசுரனைக் கொன்று விட்டு, அவனுடைய பட்ட மகிஷியர் பத்துப்பேரையும் சிறைபிடித்துக்கொண்டு வந்து, மனைவியாக்கிக் கொண்டான். நரகாசுரன் மகன், பகதத்தன் பட்டினமாகிய மாகிஷ்மதியைச் சூறையாடிய போது அங்கிருந்த 11 ஆயிரத்து 600 பெண்களை சிறை பிடித்துக் கொண்டு வந்து மனைவியாக்கிக் கொண்டான். இவர்களெல்லாமிருக்க, அறுபதாயிரம் கோபிகா ஸ்திரீகள் வேறு, கிருஷ்ணனுக்கு காமக் கிழத்தியராக இருந்தன ரென்று கூறப்படுகிறது. இவர்கள் எல்லாரையும் சேர்த்துக் கணக்கிட்டால்,

பெயருள்ளவர்கள்	9
நரகாசுரன் மனைவியர்	10
நாகன்தீபவூர் பெண்கள்	16,000
மாகிஷ்மதிப் பெண்கள்	11,600
கோபிகா ஸ்திரீகள்	60,000
ஆக மனைவியர்	87,619

எண்பத்தேழாயிரத்து அறுநூற்றுப் பத்தொன்பது பேர் ஆகும். இந்த மனைவியர், ஒவ்வொருவருக்கும், சரியாகப் பத்துப் பிள்ளை

கள் மட்டும் இருந்தாம். இத்தனை பெரிய குடும்பஸ்தனுக உள்ள கிருஷ்ணன், தன்னை நித்திய பிரமச்சாரி என்றே, வாய் கூசாமல் சொல்லி வந்திருக்கிருன். இவ்வாறு கிருஷ்ணுவதாரம் செய்த காரணமே, பூமி பாரம் தீர்ப்பதற்காகத் தான் என்று, புராணங்கள் தோறும் கூறப்படுகிறது. பூமி பாரம் குறைக்கப் பட்டதாகச் சொல்லப்படும் பாரத யுத்தம் முடிந்த பிறகு, சில வருஷம் சென்று, நடுக்காட்டில் ஒரு வேடனுடைய அம்பு பட்டு கிருஷ்ணன் இறந்து விடுகிருன். இது, கிருஷ்ணுவதார முடிவு என்று புகழப்படுகிறது. இனி, இவைகளைக் கொஞ்சம் ஆராய்வோம்.

பூமி பாரம் குறைப்பதற்காகவே, மகாவிஷ்ணு கிருஷ்ணுவதாரம் செய்தாரென்றும், அதன் காரணமாகவே, பாரதயுத்தம் ஏற்பட்டதென்றும், சொல்லப்படுவது உண்மையாஞல், இந்தப் பூமியில், மொத்தம் எத்தனை உயிர்கள் வரை வாழலாம்? எவ்வளவு உயிர்கள் தோன்றிஞல் அதிகப் பாரம்? என்கிற விவரம் ஒன்றும் பாரதத்தில் கூறப்படவில்லை.

பாரதயுத்தத்தில் திரியோதனன் பக்கம் 11 அக்குரோணி படைகளும், தருமன் பக்கம் 7 அக்குரோணி படைகளும் சேர்ந்து, போரிட்டு மடிந்ததாகப் பாரதம் கூறுகிறது.

அக்குரோணி என்ருல், தேர் 21,870-ம், யானை 21,870-ம் குதிரை 56410-ம், காலாள் 1,09,350-ம் சேர்ந்தது ஒரு அக்குரோணியாகும். தேர், யானை, குதிரை, இவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வீரன் இருப்பான். தரையில் நின்று சண்டை செய்வோருக்குக் காலாட்படை என்று பெயர். இந்த நால்வகைப் படையையும் சதுரங்க சேனை என்று சொல்வார்கள். இந்தக் கணக்கை வைத்துக் கொண்டு, ஒரு அக்குரோணிக்கு மனிதர்கள் மட்டும் எத்தனை பேர், என்று கணக்கிட்டால், 2,09,500 பேர் என்று ஆகும். இவ்விதமாக பதினெட்டு அக்ரோணிப் படையிலும் இருந்த வீரர்கள் எவ்வளவு என்று கணக்கிட்டால்,

ஒரு அக்குரோணி வீரர்கள்	2,09,500
18 ஆல் பெருக்க	18
18 அக்குரோணி வீரர்கள்	37.71,000
18 அக்குரோணி யானைகளும், குதிரைகளும்	14,09,040
மனிதரும், மிருகங்களும் சேர்ந்து	51,80,040

உயிர்ப்பிராணிகள் என்ற முறையில், மனிதர்களும், மிருகங்களும் சேர்ந்து 51 லக்ஷத்து எண்பதாயிரத்து 40 உயிர்கள்தான், பாரத யுத்தத்தில் இறந்ததாகத் தெரிகிறது. இந்த 51,80,040 உயிர்கள் கொல்லப்பட்டால், பூமியின் பாரம் குறைந்துவிடும் என்று, மகா விஷ்ணு கருதுவாரானல், அந்தக் காலத்தில் பூமியின் மேல் ஒரு கோடி உயிர்கள் இருந்தாலுமே, அதைப் பூமிக்குப் பெரும் சுமையாகக் கருதப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், அந்தக் காலத்தில் மனிதர்களும், மிருகங்களும் சேர்ந்து, ஏறக்குறைய ஒரு கோடி உயிர்கள்தான் வசித்துக் கொண்டிருந்த தென்றும், நிச்சயிக்க இடம் ஏற்படுகிறது. இவ்விடத்தில் நாம், இன்னென்றை ஞாபகப்படுத்த வேண்டும். அதாவது புராண இதிகாசங்களில் வரும் பூமி, உலகம் என்கிற வார்த்தைகள், இப்போதுள்ள இந்தியநாட்டின் அளவையே குறிப்பிடுகின்றன. ஆரியப் புலவர்கள் கண்ட பூலோகம்; இந்த அளவுக்குத்தான் என்பதைச் சிரிக்காமல் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தப் பரந்த பெரிய பூமியில் அரைக்கோடி ஜீவராசிகள் வாழ்வதுதான், சமமான பாரமென்று மகாவிஷ்ணு கருதியிருக்க வேண்டும் என்பதை, நாம் நிச்சயமாகக் கூறலாம். ஏனென்றல் ஒரு இரயில் வாகனே எடுத்துக்கொள்வோம். அதில் 80 பேர் பிரயாணம் செய்யத் தகுந்த இடமுள்ளதாக இருந்து 160 பேர் ஏறி விட்டால், எல்லோருக்கும் நெருக்கடியாக இருப்பதை உணர்கிறேம். அதிகப்படியான 80 பேரையும் இறக்கிவிட்டால் வண்டியில் இருப்பவர்களுக்கு நெருக்கடி தீருமென்று நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. அதுபோலவே, பாரத யுத்தத்தில் 51,80,040 உயிர்கள் கொல்லப்பட்டதில் இருந்து, பூமியின் பாரம் சமப்படுமானல், இந்தப் பூமியில் ஒரு கோடி உயிர்கள் தான் வாழ முடியும் என்பதே மகா விஷ்ணுவின் அபிப்பிராயம் என்று நாம் நிச்சயம் செய்ததை, எவரும் மறுக்க முடியாது.

இவ்வாறு, ஒரு கோடி உயிர்கள் பூமியில் வாழ்ந்தால், அதை, ஒரு பெரிய பாரமாகக் கருதி, மகாவிஷ்ணு அவதாரம் எடுத்து வந்தா ரென்பது உண்மையானால், தற்காலம், உலகத்தில் 210 கோடி மனிதர்களும், எண்ணற்ற கோடி ஜீவராசிகளும், ஏன்; உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிற தென்று, புராணப் பண்டிதர்களைக் கேட்க விரும்புகிறோம். இந்தியா மட்டும்தான் உலகம் என்றே வைத்துக்கொண்டாலும் கூட, 40 கோடி மக்களும், பல கோடி ஜீவராசிகளும், இப்போது; இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார் களே? இந்தச் செய்தி, இதுவரை; மகாவிஷ்ணுவுக்கு தெரிந்திருக் காதா? என்றும் புராணீகர்களைக் கேட்கிறோம். இது மட்டு மல்ல, தெய்வலோக சர்க்காரில் உயிர்களைப் படைப்பதற்கும், படைக்கப்பட்ட உயிர்களை, அதனதன், ஆயுட்காலமறிந்து அழிப்ப தற்கும், வேறு வேறு டிபார்ட்மெண்டுகள் ஏற்படுத்தப்பட்டு, அவைகளில், எமன், பிர்மா, முதலிய பொறுப்பு வாய்ந்த உத்தி யோகஸ்தர்கள் நிர்வகித்து வருகிறார்கள் என்று, புராணங்களில் சொல்லப்படுகின்றனவே, அப்படி இருக்க; அந்தக் காலத்திலும், இந்தக் காலத்திலும், திட்டமில்லாமல், ஏன் உயிர்கள் படைக்கப் பட்டிருக்க வேண்டும்? படைக்கப்பட்ட உயிர்களை, அதனதன் கால அளவில் அழிக்காமல், ஏன் விட்டு வைக்கவேண்டும்? தெய்வ லோக சர்க்காரில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்கள் வரவு செலவுக் கணக்குக் கூடத் தெரியாத மடையர்கள் என்று சொல்ல முடியுமா? என்று புராணப் பண்டிதர்களைக் கேட்க விரும்புகிறோம். அத்துடன், பூமியில் உண்டாகும் துஷ்டர்களை யும், ஜனப் பெருக்கத்தையும் ஒழிப்பதற்கு, அடிக்கடி மகா விஷ்ணு அவதாரம் எடுத்ததாகச் சொல்வது உண்மையானால்; ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்ரிக்கா, முதலான இடங்களில், இதுவரையிலும், ஏன் ஒரு அவதாரமும் எடுக்கவில்லை? அங்கே ஜனப்பெருக்கமும் துஷ்டர்களும் இல்லையா? உலகம் என்பதே இந்தியாதானா? என்கிற கேள்விகளுக்கு புராணப் பண்டிதர்கள், விளக்கம் கூற வேண்டுகிறோம். இதுவரை, "பூமி பாரம் தீர்ப்ப தற்காகவே, பாரதயுத்தம் ஏற்பட்டது" என்ற புரட்டை விளக்கி னோம். இனி, கிருஷ்ணனுடைய குண விசேஷங்களை விளக்கு வோம். கிருஷ்ணன், "அநந்த கல்யாண குணங்களையுடையவன்" என்று, ஆரியப் புலவர்கள் புளுகி யிருக்கிறார்கள். அநந்த

கல்யாண குணம் என்ருல்; அளவில்லாத நல்ல குணம் என்று பொருளாகும். இத்தகைய நல்ல குணங்கள், கிருஷ்ணனிடம் என்னென்ன இருந்தன, என்பதை ஆராய்வோம். இவன், ஒரு காலத்தில் துரோபதை துகிலுரியப்படும் போது, மானத்தைக் காப்பாற்றினுன் என்று, சொல்லப்படுகிறது. அதை, உண்மை என்றே வைத்துக் கொண்டாலும், பல பெண்கள் குளித்துக் கொண்டிருக்கும்போது சீலையைக் கவர்ந்து, மானத்தைக் கெடுத்திருக்கிருன். பாண்டவர்கள் ஐவரையும், இவனே காப்பாற்றினுன், என்று சொல்லப்படுகிறது. அதை, உண்மை என்றே வைத்துக் கொண்டாலும், ஆரியர்களின் நல்வாழ்வுக்காக, இவனுல் கொல்லப்பட்ட - நரகாசுரன் போன்ற நிரபராதிகளுக்குக் கணக்கே கிடையாது. வஞ்சகம் செய்வதில், இவனுக்கு நிகரானவர்கள் உலகத்தில் ஒருவருமே இல்லே.

உதாரணமாகச் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிருேம். இவன் பாண்டவர்களுக்காகத் திரியோதனனிடம் தூது சென்ற போது, விதுரனுக்கும், திரியோதனனுக்கும், மன வேற்றுமையுண்டு பண்ணக் கருதி, விதுரன் வீட்டிற் போய்த் தங்கினுன். தங்கி இருந்தவன்; எண்ணியபடியே இருவருக்கும் வேற்றுமையை உண்டாக்கிப், பாரதப் போரில் திரியோதனனுக்கு விதுரன் உதவி கிடைக்காமல் செய்துவிட்டான். கர்ணனுடைய நாகாஸ்திரத்தை, ஒரு முறைக்குமேல் அருச்சுனன்மீது ஏவாமல், குந்தியின்மூலம் சதிசெய்தான். திரியோதனனுக்குப் பலராமன் படைத் துணே சேர வொட்டாமல், தீர்த்த யாத்திரை செய்ய அனுப்பினுன். அசுவத்தாமனேச் சேனுதிபதியாகவொட்டாமல், அவன்மீது; திரியோதனனுக்குச் சந்தேகம் ஏற்படச் செய்தான். இவனுடைய அண்ணன், பலராமன் விருப்பத்திற்கு விரோதமாகச் சுபத்திரையை, அருச்சுனனிடம் கூட்டிவிட்டான். "அசுவத்தாமா அதகுஞ்சரா" என்று தருமனேச் சொல்லச் செய்து, துரோணனேக் கொல்வித்தான். பதினுன்காம் நாட் போரில், பொழுதைப் புரளிபண்ணி, யுத்தநீதிக்கு விரோதமாகச் சயிந்தவனேக் கொல்வித்தான். இது போன்ற சூழ்ச்சிகளுக்குக் கணக்குக் கிடையாது. உதாரணம் சொல்ல வேண்டுமானுல்,

இவளைப் பற்றி, திரியோதனன் சொன்னதாக ஒரு பாட்டு இருக்கிறது. அதாவது:-

முடைஎடுத்த நவநீதம் தொட்டுண்டு
கட்டுண்டு முன்னுள் நாகக்
குடைஎடுத்து மழைதடுத்த வஞ்சனைக்கோர்
கோள்கலமாம் கொடிய பாவி
படைஎடுத்து வினைசெய்யேன் எனப்புகன்ற
மொழிதப்பி பகைத்த போரில்
இடைஎடுத்த நேமியினுல் வெயில்மறைத்தான்
இன்னுமிவன் என்செய் வானே?

என்பதாகும். இந்தச்செய்யுள் ஒன்றே, இவனுடைய கல்யாண குணங்களுக்கு எடுத்துக்காட்டாகும். இனி இவனுடைய பித்த லாட்டங்களையும் புரட்டுகளையும் கொஞ்சம் ஆராய்வோம்.

பல்லாயிரம் பெண்களைக் கற்பழித்த இவன், தன்னை ஒரு பிரமச்சாரி என்று, சொல்லிக் கொண்டிருந்ததும், அபிமன்னன் என்பவன், அபாயச்சங்கு ஊதும்போது, இவன், வெற்றிச்சங்கு ஊதியதும், இவை போன்ற இன்னும் பல செய்திகள், இவனுடைய பித்தலாட்டங்களுக்கு, பிரதிபிம்பமாக இருக்கின்றன. இனி இவனுடைய நீதியில்லாத செயல்களைக் கொஞ்சம் ஆராய்வோம்.

இவனுடைய தம்பி சாத்தகி என்பவன், பூரிசிரவன் என்பவனுடன் வாட்போர் செய்தான். அப்போது பூரிசிரவன் கை ஓங்கி விட்டது, சற்று நேரத்தில் சாத்தகி தலை துண்டிக்கப்படும். இதை அறிந்த கிருஷ்ணன், அருச்சுனனைத் தூண்டிவிட்டு, வாலியின் மீது இராமன் அம்பிட்டதுபோல அம்பு எய்து, பூரிசிரவன் கைகளை அறுக்கச் செய்தான்.

நரகாசுரனை நள்ளிரவில் சென்று, திடீரென்று வஞ்சித்துக் கொன்று, அவன் மனைவியரைக் கைப்பற்றினுன்.

அத்தையாகிய இராதையை, மனைவியாக்கிக் கொண்டான். பல்லாயிரம் பெண்களைச் சிறைபிடித்து மனைவியாக்கிக் கொண்டான்.

மாமனாகிய கம்சனைத் திடீரென்று தாக்கிக் கொன்றான். இவை போன்ற இன்னும் பல அநீதச் செயல்களை, இவன் செய்திருக்கிறான்.

இந்தத் தீய செயல்களில் சிலவற்றை 'இராஜ தந்திரம்' என்று பெயரிட்டுக் கொண்டு, சிலர் வாதிக்கக்கூடும். அவர்களுக்கு நாம் என்ன சொல்கிறோம் என்றால், அந்தச் செயல்கள் 'இராஜதந்திரம்' என்றாலும் சரி, 'மந்திரிதந்திரம்' என்றாலும் சரி. அவைகள், ஒரு கடவுள் அவதாரத்தின் செயல்கள் அல்ல என்பதை மட்டும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதுதான். இத்தகைய அநீதமான — சாதாரண மனிதத் தன்மை கூட இல்லாத கீழ் மகனைத்தான், ஆரியப் புலவர்கள், ஆரியர்களுக்குச் சாதகமான காரியங்களைச்செய்து, நல் வாழ்வை யுண்டாக்கினான் என்ற ஒரே காரணத்திற்காகவே, கிருஷ்ணன் என்பவன் 'அநந்த கல்யாண குணமுடையவன்' என்றும், கடவுள் அவதாரம் என்றும், வர்ணித்திருக்கிறார்கள் என்பதை நம் திராவிட மக்கள் நன்றாக உணர வேண்டும்.

இனி, நரகாசுரனை எவ்விதமாகக் கிருஷ்ணன் கொன்றான் என்பதைச் சிறிது விளக்கி விட்டு இந்த ஆராய்ச்சியை முடிப்போம்.

நரகாசுரன் மிகுந்த பலசாலியாகவும், படை, பலம், கோட்டை கொத்தளங்களுடனும் இருந்தான். கிருஷ்ணனும் கூட, அவனுடன் எதிர்நிற்க முடியாமல் மூர்ச்சையடைந்தான் என்று முன்பு கூறினோம். இத்தகைய பலசாலியை நடு ராத்திரியில் ஒரு பெண் பிள்ளை கொன்று விட்டாள் என்றால், அது நடுநிலைமையுடன் ஆராய்பவர்களைத் திடுக்கிடச் செய்யும் செய்தியேயாகும்.

ஆரியர்கள், அவர்களுடைய விரோதிகளை எளிதில் தொலைப்பதற்கு, இரவுகாலத்தையும், பெண்களையும், கருவிகளாகப் பயன் படுத்தி வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. உதாரணமாகச்சம்பராசுரன் என்பவனை, தசரதன் என்பவன், இரவுகாலத்தில் கைகேசியுடன் சென்று கொன்றதாகவும், கீசகன் என்ப

வனை வீமன் என்பவன் இரவில் துரோப்தையுடன் சென்று கொன்றதாகவும் இதிகாசங்கள் கூறுகின்றன. அதைப் போலவே, கிருஷ்ணனும் சத்தியபாமையுடன் நள்ளிரவில், சென்று நரகாசுரனைக் கொன்றிருக்கிருன்.

இதன் உண்மை என்னவென்றுல், பகைவர்களை வஞ்சித்துக் கொலை செய்வதற்காக, ஆரிய மன்னர்கள் முதலில் அவர்களுடைய மனைவிமார்களைக் கொண்டு, காதல் வலை வீசச் செய்து, அந்த வலையில் பகைவர்கள் வீழ்ந்திருக்கும் சமயம், பக்கத்தில் மறைவாக இருந்து, கொன்று விடுவார்கள் என்பதே யாகும்.

இவ்விதமாகவே, சத்தியபாமையின் காதல் வலையில் நரகாசுரனைச் சிக்கச் செய்து பக்கத்தில் மறைவாக நின்ற கிருஷ்ணன் படுகொலை செய்ததைத் தவிர, நேருக்கு நேர் நின்று போரிட்டுக் கொல்லவில்லை என்பது திண்ணம்.

நேருக்கு நேர் நின்று போர் செய்யும் சுத்த வீரனுக்கு இராத்திரி காலமும், அழகிய இளம் பெண் ஒருத்தியும், தேவையில்லை என்பதை, அறிவுடையவர்கள் ஒப்புக் கொள்வார்கள். முன்பு நாம் கூறிய கைகேசியும், துரோபதையும், சத்தியபாமையும், அழகிற் சிறந்த இளம் பெண்கள் என்று புராணேதிகாசங்களில் கூறப்பட்டிருப்பது, இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

அதிதியின் குண்டலத்தையும், வருணன் குடையையும், இந்திரன் சிம்மாசனத்தையும், மீட்பதற்காகவே, கிருஷ்ணன், நரகாசுரனைக் கொன்றுன் என்பது, முழுமுழுப் பித்தலாட்டமே யாகும்.

குண்டலம், குடை, சிம்மாசனம் இவைகளை மீட்பதற்காகவே, நரகாசுரன் கொல்லப்பட்டான், என்பது உண்மையானல், அவைகளை மீட்டிக் கொண்டதுடன், கிருஷ்ணன் திரும்பி இருக்க வேண்டும். அவ்வளவோடு கிருஷ்ணன் நிற்கவில்லை. நரகாசுரன் மனைவியரை எல்லாம் சிறை எடுத்துக்கொண்டு வந்து தனக்கு மனைவியராக்கிக் கொண்டதாகப் புராணம் கூறுகிறது.

இந்தக் கொடுஞ் செயல் ஒன்றே, கிருஷ்ணனுடைய அவதாரப் பித்தலாட்டத்தையும், அயோக்கியத் தனத்தையும், வெளியாக்கப் போதுமானதாகும்.

இது மட்டுமல்ல, கிருஷ்ணன் அவதாரம் செய்வதற்கு முன்னமே பரசுராமன் என்பவன் பிறந்திருந்தான். அவனையும் மகா விஷ்ணுவின் அவதார மென்றே சில புராணங்கள் கூறுகின்றன.

இத்தனை காரணங்களாலும் நரகாசுரனுடைய முடிவு கோரமான படுகொலை என்றே உறுதியாகச் சொல்கிறோம். நரகாசுரன் ஒழிந்தால், அத்துடன் "வட நாட்டில் திராவிடப் பூண்டே தலை எடுக்காது" என்பதை, உணர்ந்தே ஆரியர்கள் சத்தியபாமையின் மானத்தை விற்று, நரகாசுரனைக் கோரமான படுகொலை செய்தார்கள்.

நரகாசுரனோடு, வடநாட்டில் திராவிட ஆதிக்கம் ஒழிந்து போகிறது என்ற, மகிழ்ச்சியினால்தான் அவன் இறந்த நாளை ஆரியர்கள் கொண்டாடினார்கள். நரகாசுரனுக்கு முன்னால், எத்தனையோ பிரபலமான அசுரர்கள் கொல்லப்பட்ட போதும் கூட, ஆரியர்கள் விழாக் கொண்டாடாத காரணம்; அத்தோடு திராவிடர் ஆதிக்கம் ஒழியவில்லை என்கிற காரணத்தைத் தவிர வேறில்லை, என்று, முன்பும் ஒருமுறை விளக்கி இருக்கிறோம்.

நாம் என் இதை இவ்வளவு அழுத்தமாகத் திருப்பித் திருப்பிச்சொல்கிறோம்? என்றால், கிருஷ்ணன் என்பவன் கடவுள் அவதாரமல்ல. அவன் ஒரு ஆரியன். ஆரியன் மட்டுமல்ல, ஆரியர்களின் தலைவன். தலைவன் மட்டும் அல்ல; திராவிடர்களின் பரம விரோதி. விரோதி மட்டுமல்ல, வட நாட்டில் திராவிடப் பூண்டையே கருவறுத்த கொடியவன். இந்தக் கொடியவன், நம்குலத்தைக் கொலைசெய்த கொண்டாட்ட நாளைத்தான் நாமும் மான வெட்கமின்றிக் கொண்டாடி வருகிறோம்.

தீபாவளி என்றால்; அது, திராவிடர்களை வீழ்த்திய நாள் என்றுதான் அர்த்தம் நரகசதுர்த்தசி என்றால்; அது, இந்த

நாட்டு மக்களை நாசஞ் செய்த நாள் என்றுதான் அர்த்தம். நரகாசுரன் இறந்தான் என்றால்; அது, ஒரு திராவிட நாட்டுத்தீரன் செத்தான் என்றே அர்த்தம்.

திராவிடத்தீரன் செத்தநாள் மட்டுமல்ல, வீராதி வீரர்களான பகதத்தன் போன்ற, திராவிட இளங்காளைகள், ஆரியரைச் சரணடைந்த நாளும் அதுவே.

திராவிடப் பெரியோர்களே! இளங்காளைகளே! "மானங் கெடவரின் வாழாமை முன்னிற்க" என்ற, பழமொழி படித்தவர்களே! நமது; நாட்டைச் சூறையாடி, நம் பெண்மக்களைச் சிறைபிடித்து, நம் தலைவனைக் கொன்று, நம்மை அடிமையாக்கி, அகதிகளாக்கி, ஆரியர்கள் வெற்றி விழாக் கொண்டாடுகிற வீழ்ச்சி நாளையா நீங்களும் கொண்டாடுவது?

நாட்டுக்கு நலம் வேண்டி, போராடி உயிர் நீத்த ஹிட்லர் எவ்வளவு பொல்லாதவனாக இருந்தாலும், ஜெர்மானிய நாட்டிலே; அவன் இறந்த நாளை சந்தோஷ நாளாகக் கொண்டாடுவார்களா?

அமெரிக்க நாட்டு அணுக்குண்டினால், அழகிய நகரங்கள் தரை மட்டமாக்கப்பட்டு, அமெரிக்காவுக்கு அடிபணிந்த, ஜப்பானிய வீரர்கள் அந்த நாளை, நல்ல நாளென்று கொண்டாடுவார்களா?

திராவிடர்களாகிய நீங்கள் மட்டும் நரகாசுரன் இறந்த நாளை. நல்ல நாள் என்று கொண்டாடுகிறீர்களே இது உங்களுக்கு மானக் கேடாக இல்லையா?

நரகாசுரன்; உங்கள் இனத்தவன் இல்லையா? அவனை, பன்றிக்குப் பிறந்தவன் என்று நம்புகிறீர்களா? இத்தகைய கட்டுக்கதைகள் அறிவைக் கேலிசெய்வதாகத் தோன்றவில்லையா?

அவன் திராவிடனல்ல பன்றிக்குட்டி தான் என்று வைத்துக் கொண்டாலும்கூட, பன்றிக்குட்டி இறந்ததற்காகவா இத்தனை கொண்டாட்டம்? ஓராண்டு இரண்டாண்டா? எத்தனை

R34
N47

ஆண்டுகளுக்கு பன்றிக் குட்டி இறந்த நாளைக் கொண்டாடப் போகிறீர்கள்? வேண்டாம்; வேண்டாம்; நரகாசுரன் பன்றிக் குட்டியல்ல; பன்றிக்குட்டி செத்ததற்காக ஆரியர்கள் இத்தனை ஆடம்பரம் செய்ய மாட்டார்கள் என்றாவது உணருங்கள்.

ஆரியப் பண்டிகையை ஒழியுங்கள். இன உணர்ச்சி கொள்ளுங்கள். இன்று வரை உங்களைச் சூத்திரன் என்கிறார்களே, இதிலிருந்தாவது ஆரியர்களுக்கும் நமக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்று தெரியவில்லையா?

ஆரியர்களுக்கும், நமக்கும், கடுகளவு தொடர்பிருந்தால், நம்மைச் சூத்திரர்கள் என்று, அவமதிப்பார்களா? இத்தகைய; அன்னியன் பண்டிகையைக் கொண்டாடுகிறீர்களே, உங்களுக்கு வெட்கமில்லையா?

சென்ற நாள் செல்லட்டும். இனியாவது விழிப்படையுங்கள். உண்மையை உணருங்கள். ஆரியன் வேறு, நாம் வேறு என்பதைச் சிந்தித்துத் தெளியுங்கள்.

தீபாவளிபோன்ற அறிவற்ற மானக்கேடான பண்டிகைகளை நிறுத்துங்கள். ஆரிய, அடிமைத் தளையை அறுத்தெறியுங்கள். ஆரிய அடிமைத் தனம் நீங்கிய நன்னாளைக் கொண்டாடுங்கள்.

முற்றும்.

ஒழிக தீபாவளி.

ஒழிக இழிவு,

ஒழிக ஆரிய அடிமைத் தனம்.

ARCHIVES LIBRARY EGMORE MADRAS-600 008
112139

நாடார் குல மித்திரன் பிரஸ், அருப்புக்கோட்டை. R. 58 C 1000

தமிழ் வைத்தியம்

உலகத்தில் உள்ள வைத்தியங்கள், எல்லாவற்றையும் விட மிகப் பழமையும், சிறப்பும், பூரண வளர்ச்சியும் பெற்ற வைத்தியம், நமது, தமிழ் வைத்தியந்தான். தற்காலத்தில் ஆங்கில வைத்தியம் சிறந்ததென்று எல்லாரும் நினைக்கிறார்கள். ஆனால்; அது, ஓர் அறியாமையேயன்றி வேறில்லை,

மருந்துகளை ஊசிமூலமாக நேரடியாக இரத்தத்தில் கலக்கச் செய்து நோய்களை நீக்குவதிலும், அறுத்துத் தைத்து இரண சிகிச்சை செய்வதிலும், ஆங்கில வைத்தியம் சிறந்த தென்றே சொல்லலாம். என்றாலும்; இரண சிகிச்சை நீங்கலான, இதர நோய்களுக்கு, ஊசி மருந்துகள் உறுதியான பயனளிப்பதில்லை. அதாவது: குஷ்டம், க்ஷயம், முதலான கடின நோய்களில் ஊசி மருந்துகள் தற்கால சாந்தியளிப்பது தவிர, நோய் முற்றிலும் குணப்படுத்துவதாகத் தெரியவில்லை. தமிழ் மருந்துகளால் நீக்கப்பட்ட நோய், மீண்டும் வருவது அரிதினும் அரிது.

இதனால்தான் தமிழ் மருத்துவம் சிறந்ததென்று கூறுகிறோம். தமிழ் வைத்தியத்திற்கு நீண்டகாலமாக அரசாங்க ஆதரவு இல்லாததாலும், கொஞ்சகாலமாக கல்வியறிவு, ஆராய்ச்சியற்றவர்களின் ஆதிக்கத்தில் தமிழ் வைத்தியம் இருந்ததாலும், சொந்த நாட்டிலேயே, அது; புறக்கணிக்கப் பட்டு வருகிறது.

தமிழ் வைத்தியத்திற்குப் போதுமான அரசாங்க ஆதரவு கிடைத்து, சிறந்த ஆராய்ச்சிக் கூடங்கள் ஏற்பட்டுச்; சீர்திருத் தம் செய்யப்படுமானல், உலகத்திலேயே முதலிடம் பெறும். ஏனென்றால்; மனித உடம்பை மாறாத வாலிபத்தில் வைத்துக் கொண்டிருக்கத் தகுந்த காயகற்பம் என்கிற அரிய மருந்து கள் தமிழ் வைத்தியத்தில்தான் ஆதியில் கண்டு பிடிக்கப்பட்டன. அது முதலிடம் பெறுவதில் அதிசயம் என்ன இருக்கிறது?

இங்ஙனம்

வைத்திய பாஸ்கரன் **M. S. இராமசாமி,**

THE
C. M. V. PRESS,
MADURA.